மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 3 | 1 - 11 - 54 | இதழ் 1

★

"புரட்சித் தீ மூண்டுவிட்டது! ஆணவம் அழிய, கொடுமை நீங்க, உரிமை நிலைபெற எழுச்சி கொள்வீர்!" என்று வெஞ்சின வீரமொழி பகன்று, தொழிலாளத் தோழர்களைத் தட்டி—எழுப்புகிறான் புரட்சித் தலைவன் லெனின்

★

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

நன்றி அறிவிப்பு !

எழில் மிகுந்த ஈழத்தில் பதினான்கு நாட்கள் தங்கியிருக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அதன் இயற்கை வளமும் செயற்கை வளமும் என் கண்ணைக் கவர்ந்தன; அங்குள்ள தமிழ் மக்கள் காட்டிய அன்பு என் உள்ளத்தைக் கவர்ந்தது; அவர்களின் தமிழ் ஆர்வம் என் கருத்தைக் கவர்ந்தது; அங்குச் செழித்தோங்கிவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி என் உணர்ச்சியைக் கவர்ந்தது; ஆங்காங்கு பொதுமக்கள் அளித்த வரவேற்பு என் ஊக்கத்தைக் கவர்ந்தது.

நான் ஈழநாட்டிற்கு வருகை தரவேண்டியதை வற்புறுத்தி எனக்கு ஊக்கமளித்த கெழுதகை நண்பர் எஸ். சேதுராமன் அவர்களுக்கும், நான் ஈழத்தில் இருந்தகாலை என் உடன் இருந்து எனக்கு எல்லாவித உதவிகளையும் பெருந்தகைமையோடு செய்துவந்த நண்பர்கள் ஆதி. கருப்பையா, மாணிக்கம், சீனு, 'சுதந்திரன்' ஆசிரியர் சிவநாயகம், வேலாயுதம் ஆகியோர்க்கும் என் நன்றி உரித்தாகுக!

என்னை ஈழத்திற்கு வரவழைத்துக் கொழும்பு தமிழ்ச்சங்க விழாவில் நான் கலந்துகொள்ளவேண்டி அரும்பாடுபட்டதோடல்லாமல், எனக்குப் பேருதவியாகப் பெரும்பணிகள் புரிந்த தமிழ்ச் சங்கப் பொதுச்செயலாளர் வித்துவான் வ. மு. கனகசுந்தரம் அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக!

கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் தோழர் வே. அ. கந்தையா, துணைத் தலைவர்கள் தோழர்கள் மதியாபரணம், சோ. நடராசன் ஆகியோர்க்கும் ஏனைய உறுப்பினர்க்கும் என் நன்றி உரித்தாகுக!

திராவிட முன்னேற்றக் கழகத்தை நல்ல அமைப்பு முறையோடு வளர்த்து, சிறப்பான முறையில் செயலாற்றி, என்னைப் பெருமைப்படுத்தும் வகையில் வரவேற்கக் காரணமாக இருந்த தோழர்கள் இரா. அதி. மணி, பீர்முகம்மது, கதிரவன், தம்பித்துறை, ஆங்காங்குள்ள கிளைக்கழகச் செயலாளர்கள், மத்திய கழக—கிளைக்கழகச் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர்க்கு என் நன்றி உரித்தாகுக!

எனக்கு வரவேற்பு அளித்து, ஆங்காங்கு என்னைப் பாராட்டிய தி. மு. க. கிளைக் கழகங்களுக்கும், தி. மு. க. வைச் சார்ந்த சங்கங்களுக்கும், தமிழ்ச் சங்கங்களுக்கும், தனிப்பட்ட நண்பர்களுக்கும், பொதுமக்களுக்கும் என் நன்றி உரித்தாகுக!

நான் இலங்கைக்குச் செல்லும்போதும், திரும்பி வரும்போதும் சென்னை விமான நிலையத்திற்கு வந்திருந்து, நான் பூரிப்படையும் வகையில், என்னை வழியனுப்பியும் வரவேற்றும் எனக்குப் பெருமையளித்த நண்பர்களுக்கும், சென்னை மாவட்ட தி. மு. கழகத்திற்கும், கிளைக் கழகங்களுக்கும், தனிப்பட்ட சங்கங்களுக்கும் என் நன்றி உரித்தாகுக!

வணக்கம்,

இரா. நெடுஞ்செழியன்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

1-11-54 திங்கட்கிழமை

வீரத்தின் பரிசு!

கல்லக்குடி காட்சியளிக்கிறது. வளமார் திராவிடமெங்கும் வாழ்த்துச் செய்திகள் குவிகின்றன.

வெற்றிச் செய்தி—வீரர் முகாமில் ஒரு மகிழ்ச்சி—நாட்டு மக்களிடை ஒரு நம்பிக்கை நட்சத்திரம்.

ஜூலை 15-ல் திராவிடம் தொடுத்த போராட்டத்தில், சென்னையிலும் கல்லக்குடியிலும் இரண்டு களங்கள் அமைக்கப்பட்டன. நாட்டை அல்லற்படுத்த வந்த கல்வித் திட்டத்தை எதிர்க்க, நாட்டின் அவமானச் சின்னமாக இருந்த "டால்மியாபுரம்" என்ற அவமானப் பெயரை மாற்றியமைக்க.

அண்ணாவின் அறிவிப்பு அதே வீரர்களைப் பாசறைக்கு அழைத்திடும் போர்முரசமாயிற்று. வீரர்கள் குவிந்தனர்; போராட்டம் துவங்கியது. ஆச்சாரியார் ஆர்ப்பரித்தார்; அடக்குமுறையைத் தூவினர்; துப்பாக்கி குண்டுகள் பாய்ந்தன.

இரத்தம் சிந்தியது; வீரம் அங்கே சிரித்தது.

சிந்தப்பட்ட இரத்தம் வீண்போகவில்லை, காட்டப்பட்ட வீரம் மறக்கப்படவில்லை.

புதிய கல்வித்திட்டம் போனவிடம் தெரியவில்லை. அதைக் கொண்டுவந்த ஆணவத்தின் பிரதிநிதி—ஆச்சார்ய ஸ்வாமிகள் "ராமா கோவிந்தா!" என்று பஜனை மடத்துக்குப் புறப்பட்டுவிட்டார்.

இரண்டாவது போராட்டக் களமான கல்லக்குடியிலும் மாபெரும் வெற்றி. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அன்று—ஜூலை 15 ஒட்டிவந்த கல்லக்குடி என்ற அழகு தமிழ்ப் பெயர்—கருப்பும் சிவப்பும் ஒளிவிட ஒட்டப்பட்ட—வீரர்தம் கண்ணீரும், செந்நீரும் கலந்திடக் காட்சியளித்த பெயர், இன்று நிலை பெற்ற பெயராகிவிட்டது. அவமானச் சின்னம் அகற்றப்பட்டது; அழகு தமிழ்ப் பெயர் ஒளிவிடுகிறது.

உவகை தரும் செய்தி—வளமார்த் திராவிடத்தில் வீரம் இன்னும் மறைந்துவிடவில்லை என்பதற்கோர் எடுத்துக்காட்டு.

வெற்றி விழாவில், அந்த வெற்றியைக் கொணர்ந்த வீரர்தம் தியாகத்தை நாம் நினைக்காமலிருக்கமுடியாது. கண்ணிழந்தோரும், கரமிழந்தோரும்—அவர்கள் தந்த காணிக்கை இன்று கல்லக்குடியாகக் காட்சியளிக்கிறது. அந்த வீரர்களுக்கு நமது வாழ்த்தும் வணக்கமும். அவர்கள் பெற்ற தழும்புகள், வீரம் தந்த வெற்றிப் பரிசுகள் அவர்தம் உடலில் கண்ணும், விரலும், கையும், காலும் குறைந்து காணப்பட்டாலும்; அவர்தம் குன்றாத புகழ், குறையாத வீரம், மங்காத மாட்சி, மறையாத பண்பு இவைகளே நாட்டுமக்களுக்கு அவர்களைப் பார்க்குந்தோறும் எண்ணுந்தோறும் காட்சியளிக்கிறது.

கல்லக்குடி காட்சியளிக்கிறது, அதையடுத்து, அந்த வெற்றியை வாங்கித்தர, தம் உயிரைக் காணிக்கைதந்த மாவீரர்களின் கல்லறைகளும் காட்சியளிக்கின்றன. கல்லக்குடி பெற்ற வெற்றிக்குப் பின், அடுத்த கட்டமாக, உயிர் நீத்தோர்களின் குடும்பத்தாருக்கு "நினைவுக் காணிக்கை" சேர்க்கவேண்டுமென பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்துள்ளார். திராவிடம் செய்ய வேண்டிய கடப்பாட்டைச் செவ்வனே செய்து முடிக்குமென்று நம்புகிறோம்.

அடைந்த வெற்றி கண்டு மகிழ்கிறோம். அடையவேண்டிய தூரத்தையும் இடத்தையும் நோக்கி உறுதிகொள்கிறோம்.

வாழ்க திராவிடம்!

வளர்க நம் வெற்றிகள் !!

கருத்துக் கதிர்

அழிவைத் தடுக்கும் ஆயுதம் எது ?

"உலகத்தை அணுசக்தி நாசத்திலிருந்து பாதுகாக்க அதற்கு மதமே அத்யாவசியமாக இருக்கிறது. இம்மாதிரியான ஆசிரமங்கள் பல இந்தியாவிற்கு தேவை. இவற்ருல்தான் சாந்தியை உலகில் பரப்ப இயலும்" என்ற கருத்தை வெளியிட்டுள்ளார், இராஜேந்திர பிரசாத் அண்மையில், அரித்துவாரம் அருகில் இரண்டு லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட சப்தரிஷி ஆசிரமத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில். அணுசக்தி நாசத்தைத் தடுக்கச் சப்தரிஷி கூடத்தை நாடுகிருர் நமது இந்தியத் தலைவர். ஆனல் இந்து மதத்தின் கேடுகளையும் வேறுபாடுகளையும் உணர்ந்த காரணத்தாலோ, என்னவோ, நேரு பண்டிதர், அதே நாளில் வெளியிட்ட செய்தியொன்றில், இராஜேந்திர பிரசாத்தின் கூற்றை மறுக்கும் வகையில், "அணு, ஹைட்ரஜன் குண்டு பயங்கரம் மிக்குள்ள இத்தருணத்தைப்போல வேறு எப்போதுமே பௌத்த போதனைகள் அவசியமாயிருந்ததில்லை" என்று தெரிவித்திருக்கிருர். இந்து மதத்தின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார் நமது இந்தியத் தலைவர். புத்தக்கொள்கைகள் முக்கியமெனப் போதிக்கிருர் பிரதமர்.

ஆனல் உலக நிகழ்ச்சிகளை உற்று நோக்கினல் இப்பொழுது எந்த நாட்டிலும் (புத்த மதத்தினர் உள்பட) அறிவியல் தழுவிய மதத்தையே பெரிதும் விரும்புகின்றனர் என்பது தெரியவருகிறது. இரக்கத்தை இலட்சியமாகக்கொண்ட இயேசுவின் வாரிசுகள், மக்கள் நலனில் நாட்டங் கொண்ட மாஸ்கோவாசிகள், புதிய சமுதாயத்தை உருவாக்கிவரும் புத்தர் நாட்டினர்—எல்லோரிடத்திலும் அழிவு ஆயுதங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இரண்டு லட்சங்களில் கட்டப்படும் சப்தரிஷி கூடங்களினல் எந்த எழுச்சியும் உண்டாகிவிடாது. முள் கொண்டுதான் முள்ளை எடுக்கவேண்டும். அழிவு சக்திகள் அகல அறிவியல் அறிவு எல்லா நாட்டினரிடத்திலும் பரவி நிற்கவேண்டும். அழிவின் மூலம் ஆதிக்கம் நிலைபெற்றதை வரலாறு எப்பொழுதுமே அறிவித்ததில்லை. எனவே, அழிவு சக்திகளைக்கண்டு அஞ்சாமல் அவைகளை ஆக்க சக்திகளாக மாற்றி உலகம் பயனடையும் வகையில் முயற்சி செய்யவேண்டும். அந்த அளவுக்கு அறிவியல் அறிவு மலர்ந்தால்தான் இயலும்.

ஆகவே நமக்குத் தேவை, சப்தரிஷி கூடங்களும் சனாதனசபைகளுமல்ல, மதம் போதிக்கும் மடங்களும், செல்வம் கொழிக்கும் கோயில்களும் பல்கலைக்கழகங்களாக, அறிவியல் ஆராய்ச்சிக்கூடங்களாக மாற்றப்படவேண்டும். அழிவைத் தடுக்கும் ஆயுதம் மதமல்ல, அறிவியல் அறிவுதான்!

ஃ ஃ ஃ

ஜீயர் வெறுப்பும் ஜகஜீவர் தீர்ப்பும்

"மதச் சார்பற்றதென்று சொல்லிக்கொள்ளும் நமது சர்க்கார் பல மதத்தினர் அடங்கிய சட்டசபையில் ஒரு குறிப்பிட்ட மதத்தினர்களை பாதிக்கும் முறையில், விவாகம், சொத்துரிமை சமூகச் சீர்திருத்தம் பற்றிச் சட்டம் நிறைவேற்றுவது பொருந்தாது. அந்தக் காரியங்களை அந்தந்த மதத்தினரிடமே ஒப்படைக்கவேண்டும்" என்று அஹோபில மடம் ஜீயர் சுவாமிகள் அண்மையில் பகன்றுள்ளார். பகுத்தறிவு ஆக்கம் பெறுவது கண்டு மருள்கிருர் மதத்தலைவர்! தலைமுறை தலைமுறையாக மதத்தினல் உண்டாக்கப்பட்டு வழக்கத்திலிருந்த சமூக முறைகளில் சர்க்கார் தலையிட்டது சமீபகாலத்தில்தான். அதற்கு முன் மதத்தலைவர்கள்தான் சமூகத்தின் முதல்வர்கள் என்று கருதப்பட்டனர். மதம் என்ற பெயரில் இந்த மதத்தலைவர்கள் ஏற்படுத்திய சமூக அமைப்பில் மக்கள் வாழ்வு மலரவில்லை; அறியாமை, தீண்டாமை, சாதிப்பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள்—இவைதான் நிரம்பி இருந்தன. முடியாட்சிக்காலங்களில் அரசர்களின் ஆதரவைத் தந்திரமாகப் பெற்று மதத்தலைவர்கள் இந்தத் தீய முறைகளுக்கு ஆக்கம் தந்தனர். ஆனல் உரிமைவேட்கை எழுந்த

போது நாடு முடியாட்சியினின்றும் குடியாட்சியாக மாற்றப்பட்டது. மக்கள் நலனைக் காணுவதே குடியாட்சியின் முறை என்றபடி சமூக அமைப்பில் தோன்றும் குறைகளைக் கண்டு போக்குவது, மக்களைப் பிரதிபலித்து நிற்கும் மந்திரிசபையின் கடமையாகும். மக்களாட்சியில் மதத்தலைவர்களின் ஆதிக்கம் குலைவது கண்டு சோகிக்கிறார் ஜீயர் சுவாமிகள். தனக்குத் துணைதேட "பல மதத்தினர் அடங்கிய சட்டசபை" என்ற அர்த்தமற்ற வார்த்தையை வீசியிருக்கிறார். 36 கோடி மக்கள் கொண்ட இந்தியாவில் இந்து மதத்தினர் எண்ணிக்கை மட்டும் 30 கோடிக்கு மேலாகும். பெரும்பான்மை மக்களுக்கு ஏற்படும் கேட்டை ஆட்சிமுறை மூலம் அகற்றுவது இன்றியமையாமையாகும். மேலும் மற்ற மதத்தினரிடை இந்து மதத்தைப் போல் அவ்வளவு, சமுதாயத்தைச் சீரழிக்கும் பாகுபாடுகள் இல்லை.

ஜீயர் சுவாமிகள் கூறியிருப்பது தவறு என நாம் கூறுவதைவிட ஒரு காங்கிரஸ்காரர், அதிலும் மந்திரி, அதிலும் ஒரு மத்திய சர்க்கார் மந்திரி கூறினால் எப்படி இருக்கும்!

"முன்னேற்றமும் சுபீட்சமும் காணப்படும் புதிய சமூக அமைப்பு ஏற்படவேண்டுமானால் இண்டாமையையும், ஏழ்மையையும் போக்க வேண்டும். சமூக மேம்பாட்டிற்காக சீர்திருத்த முறை எப்பொழுது கையாளப்பட்டாலும் ஒரு பிரிவிலிருந்து எதிர்ப்பு ஏற்படுவது இயற்கை. ஏனெனில் அந்தப் பிரிவின் விசேஷ உரிமை பாதிக்கப்படுகின்றது. ஹிந்துசட்டத்தொகுப்பு மசோதா மற்ற விவசாய சீர்திருத்தமும் பார்லிமெண்டில் வந்தபொழுது எதிர்ப்பை நாம் பார்த்தோம். ஒருசிலர் உயர்ந்த அந்தஸ்து வகிப்பதற்காக கோடிக்கணக்கான மக்களின் நலன்களைப் புறக்கணிப்பதற்கில்லை"

மேற்கண்ட வார்த்தைகளை உதிர்த்திருப்பது நாமல்ல, மத்திய சர்க்கார் போக்குவரத்து இலாகா மந்திரியான 'ஸ்ரீ' ஜகஜீவன்ராம்! மந்திரியார் சிந்திய சொற்கள் ஜீயர் சுவாமிகளுக்கும் அவரது அடியார்களுக்கும் நல்லதொரு பாடமாக அமையும் என எண்ணுகிறோம்.

ஃ ஃ ஃ

நாம் விரும்பும் புராதனப் பண்பாடு

"ஹிந்து மதமும் இந்தியாவின் எதிர்காலமும்" என்ற தலைப்பில் சென்னையில் ஒரு மடத்தில் நியுயார்க் ராமகிருஷ்ண மடத் தலைவர் சுவாமி நிகிலாநந்தர் அண்மையில் பேசியிருக்கிறார். அவர், "ஒரு தேசத்தின் எதிர்காலத்தை அறிய விரும்புகிறவன் அந்த தேசத்தின் புராதன நிலையை ஆராய்தறிய வேண்டும்" என்று சர்ச்சில் துரைமகனார் கூறியதை மேற்கோள் காட்டி "இந்தியப் பண்பாட்டின் பெருமையை உணர வேண்டுமாயின், 1000 ஆண்டுகளுக்கு முன் இந்தியா இருந்த நிலையை உன்னிப் பார்க்க வேண்டும். ஹிந்து சமூகம் அப்போது வீர்யத்துடன் இருந்தது. பண்பாட்டை சிருஷ்டித்தவர்கள் ரிஷிசிரேஷ்டர்கள். வேதங்கள் அதைக் கூறும்" என்று பேசியிருக்கிறார். நிகிலாநந்தர் கூறியதில் (அவரால் கூற முடிந்த, கூறவேண்டிய) அந்தப் புராதனக்காலம் சென்ற ஒரு 1000 ஆண்டுகளேயாகும்.

சர்ச்சில் கூறியதைப் போல, எதிர்காலத்தை உருவாக்கத் துடிக்கும் நாமும் நமது புராதன காலத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டியதுதான். சுவாமி நிகிலானந்தர் 1000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையை ஆராயச் சொல்லுகிறார். நாம் இன்னும் ஒரு 1000 ஆண்டுகள் சேர்த்து 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த புராதன நிலையை ஆராய்ந்தோமானால் தெளிவான பண்பாடு நன்கு கிடைக்கும்.

அந்தப் புராதன காலத்தில் நாடு வளமை பெற்றுச் சிறந்திருந்தது. சேர, சோழ, பாண்டியர் வீரம் செறிய ஆண்டு வந்தனர். நீதி தவறிய இடத்தில் உயிர் நீத்தான் பாண்டியன். தமிழரை இகழ்ந்துரைத்த கனக விசயரை, கங்கை சென்று, வென்று, கல் சுமக்கச் செய்தான் சேரன். கடல் கடந்து வெற்றி கண்டான் சோழன். அரசன் குடிமுறை தழுவி கோலோச்சினான். எளியோரின் வறுமையைப் போக்கினான். புலவரைப் போற்றி முத்தமிழ் வளர்த்தான். யவனர், உரோமர், எகிப்தியர் முதலிய மேலை நாட்டினருக்கு இங்குள்ள மணப் பொருள்களை அள்ளிக் கொடுத்தான். உலகின் எட்டுத் திக்கிலும் நமது மண்ணின் புகழ் பரப்பினான். சங்கால இலக்கியங்கள் இதைக் கூறுகின்றன.

நிகிலாநந்தர் கூறியது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, நாம் எடுத்துக் காட்டும் படங்கள் அதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது! ஆரியக் கலாச்சாரத்தை எண்ணிப் பார்க்கச் சொல்கிறார். சங்க காலத்திற்கு முற்பட்ட நமது திராவிடப் பண்பாட்டை விளக்கி நாம் கூறுகிறோம். ஆரியத்தால் திராவிடம் அழிந்த வரலாற்றைக் கூறுகிறோம்.

எழில்மிகு திராவிடத்தை தம் வசப்படுத்த ஆரியர் செய்த வஞ்சகச் செயல்கள்! ஆதிக்கம்

பெற்ற இடங்கள்! தீயிலிட்ட நூல்கள்! கழுகிலேற்றிய உருவங்கள்! அழித்த அரசுகள்! இடித்த கோட்டை கொத்தளங்கள்! இவைகளையெல்லாம் அறிகிறோம், ஆராய்ந்ததின் விளைவாக. சிந்தனையில் மூழ்கினோம். முடிவில் எழுச்சி உதயமாயிற்று. அவைதான் இன்று மாநிலத்தில் பரவி நிற்கும் திராவிட இயக்கங்கள்! "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற உரிமைக் குரல்கள்!!

தென்னிந்தியாவில் இந்தி!

"தென்னிந்தியாவில் இந்தியைப் பரப்புவதில் அவசரம் காட்டக் கூடாது" என்று இந்தி சாகித்ய சம்மேளனத்தில் பேசிய டாக்டர் அமர்நாத் ஜா அவர்கள் இந்தி அன்பர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளனர்.

அரசியல் சட்டத்தின்படி, இந்தியப் பொது மொழியாக இந்தி ஆக்கப்பட வேண்டுமென வடநாட்டினர் முயல்கின்றனர். அதற்காக ஓர் புறம் லட்சக் கணக்கான ரூபாய்களைக் கொட்டி திட்டங்கள் தீட்டி, இந்தி பிரசாரத்தை வளர்த்தாலும், மறுபுறம் அவர்களுக்கேச் சந்தேகமும் திகிலும் வந்து விடுகிறது. இவ்வளவு அரும்பாடு பட்டும் இந்தி மற்ற மொழியினரால் ஏற்றுக் கொள்ளப்படுமோ வென்று. அதிலும் தென்னாடு என்றால், இந்திப் பக்தர்கள் சற்று தடுமாற்றத்துடன் தான் பேசவேண்டியிருக்கிறது.

இந்தி தென்னாட்டில் நுழைக்கப்படும் பொழுது, அது வேற்று மொழி வரவாக மட்டும் இங்கு கருதப்படவில்லை. அது வேறொரு கலாச்சாரப் படையெடுப்பாகக் கருதப்படுகிறது. அதனால் தான் சாதாரண மொழிக்குக் காட்டப்படும் எதிர்ப்பைவிட, இந்தி நுழைவுக்கும் கட்டாய இந்திக்கும் தென் பகுதியில் வரும் எதிர்ப்பு அதிகமானதாகக் கடுமைமானதாக இருக்கிறது.

தென்னாட்டில் திராவிடக் கலாச்சாரமும், வடநாட்டில் ஆரியக் கலாச்சாரமும் நிலவுகின்றன. தேசியத் தலைவர்களும் இந்திப் பிரியர்களும் எவ்வளவுதான் மறைத்தாலும், மறுத்தாலும், "ஏக இந்தியா" என்று கூக்குரலிட்டாலும், தென்னிந்தியா—அங்கு தனிப்பட்ட கலாச்சாரம் இருப்பதை மறந்துவிட முடியவில்லை. இல்லாவிட்டால், இந்தி வளர்ச்சியைப் பற்றி பேசும் பொழுது, தென்னாட்டில் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் ஏன் வரவேண்டும்? காரணம், வடநாட்டுக்கும், தென்னாட்டுக்கும் உள்ள இன கலாச்சார, மொழி வேற்றுமைகள் அவர்களுக்கும் நன்கு தெரிந்திருக்கிறது.

வடநாட்டில் இருப்பவர்கள் இந்தியை வளர்க்கப் பாடுபடுவது, உண்மையில் ஆரிய கலாச்சாரத்தை வளர்க்கப் பாடுபடுவதாகும். இந்தி வளர்ச்சியடைந்தால், இந்தி மொழி இந்தத் துணைக்கண்டம் முழுவதும் ஆதிக்கஞ் செலுத்துவதானால் அது ஆரிய கலாச்சாரத்தை வளர்த்ததாகும் என்ற உள்ளெண்ணமே இந்தி வெறியர்களுக்கு முதல் தூண்டுதலாக இருக்கிறது. இந்தி மொழி என்று கூறும் பொழுது, சமஸ்கிருத வளர்ச்சியையும் தேவநாகரி லிபி ஆதிக்கத்தையும் குறிப்பிடுகின்றனர். சமஸ்கிருதம் வளர்ந்தால், அது வேத புராணங்களுக்குச் செல்வாக்கு உண்டாகும். அந்தச் செல்வாக்கு ஆரிய தருமத்துக்கும் அடிப்படையாகும். இந்த முறையை நாம் குறிப்பிடுவது, வெறும் வெறுப்புணர்ச்சியாலோ, எதிர்ப்பு நோக்கத்தாலோ அல்ல, அண்ணல் காந்தியார் அவர்களும் இந்தக் கருத்தை வேறொரு வகையில் ஒத்துக் கொண்டுள்ளார். இந்தி வளர்ச்சிக்குப் பாடு படுபவர்களில் பலர் சமஸ்கிருத மொழிக்கு ஆதிக்கந் தேடுவதை முதலாகக் கொண்டிருப்பதை அவர் கண்டித்து "இந்த நண்பர்கள் வழங்குகிற மொழியை விட்டு, இந்திய வாழ்வை ஆரிய மயமாக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது" என்று கூறியிருக்கிறார். காந்தியார் மொழிப் பிரச்சினையை ஆரம்பித்த காலத்தில், இந்தி—உருது இரண்டுக்கும் பொதுவாய், தேவ நாகரி உருது லிபி இரண்டிலும் வழங்கத் தக்க இந்துஸ்தானி மொழியை அவர் ஆதரித்தார். ஆனால் இப்பொழுது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது, தேவ நாகரிலிபியில், சமஸ்கிருதச் சொற்களை அளவுக்கு மீறித் தாங்கிக் கொண்டிருக்கும் இந்தி துணைக்கண்டம் பூராவும் பரப்பிடத் திட்டமிடப்படுகிறது. காந்தியார் சொற்படி பார்த்தல், அது "இந்திய வாழ்வை ஆரிய மயமாக்கும் வேலை". இதனால்தான், கலாச்சார இன வேறுபாடு இருப்பதால், வடநாட்டு இந்திக்குத் தென்னாட்டில் எதிர்ப்பும், கண்டனமும் இருக்கிறது.

வரலாற்றில் ஒரு அதிசயம்!

[பா. வாணன்]

"இந்திய உபகண்டத்தில், ஆதிபத்தியம் செலுத்திய இந்துமத குருமார்கள் தங்களுக்கென்று ஒரு மொழியை ஏற்படுத்திக்கொண்டனர். அதே நேரத்தில் சிதறிக்கிடந்த இந்த உபகண்டத்தின் பல்வேறு நாடுகளில், பல்வேறு மொழிகள் பேசப்பட்டு வந்தன. இருந்தபோதிலும், வடமொழியிலேயே விஞ்ஞானம், தத்துவம், ஆத்மார்த்திகம் எல்லாம் போதிக்கும் தந்திரத்தை, அந்த இந்து மதகுருமார்கள் கையாண்ட காரணத்தால் பாமர மக்களுக்கு போதிய கல்வியறிவு பெற சந்தர்ப்பம் இல்லாமலே போயிற்று! அதன் பலன் கங்கை முதல் கன்னியாகுமரிவரை வசித்த அத்தனை மக்களையும் அடக்கி ஆதிக்கம் புரியும் வசதி கிடைத்தது, இந்துமத குருமார்களுக்கு!"

வடமொழியால் நாட்டுக்கு விளைந்த தீமைகளையும், பிராமணீயம் பல நூற்றாண்டுகளாக செய்துவரும் கொடுமைகளையும் எடுத்து விளக்க எண்ணியவர், உதிர்த்த வார்த்தைகள் அல்ல இவை. நாட்டிலே கல்வியறிவு பரப்பிட எண்ணி, எட்டிலே மிகுந்த பணத்தில் ஓரளவை ஒதுக்கி, உயர்படிப்புக்கென பல்கலைக் கழகம் நிறுவிய ராஜா அண்ணாமலையாரின் ஞாபகார்த்த விழாவிற்கு, சென்னையிலிருந்து அண்ணாமலை நகர் ஏகிய உயர்நீதிமன்ற நீதிபதி மாக் அவர்களின் சொற்பொழிவின் ஒரு பகுதிதான் நாம் மேலே காட்டியிருப்பது.

இந்திய உபகண்டம் விடுதலைப்பட்ட நாடாகி ஏழாண்டுகளாகிவிட்டது. இந்த ஏழாண்டுகளில் எங்கு நோக்கினும் விவாதிக்கப்படும் பிரச்சினை 'ஒன்றுபட்ட இந்தியா' தான்.

வெள்ளைக்காரன் வரும் முன் இந்திய உபகண்டம் தனித்தனி நாடுகளாக சிதறிக்கிடந்தது. ஒவ்வோர் நாட்டிலும் ஒவ்வொருமொழி, வெவ்வேறு கலாச்சாரம். அரசியல் ரீதியாகவும், ஆட்சி மூலமாகவும் இந்தியா ஒன்று பட்டே இருந்ததில்லை. அசோகன் ஆட்சியும், அக்பர் ஆட்சியும்கூட விந்தியத்திற்கு தெற்கே வரவில்லை. அவுரங்கசீபின் ஆட்பலமும், அலாவுதீனின் அதிகாரமும் நருமதை, தப்தி ஆறுகளோடேயே நின்றுவிட்டது. ஊரைச் சுற்றிய மாலிக்காபூர் போனவிடம் தெரியவில்லை.

திராவிடம் எந்தக்காலத்திலும் தனித்தே வாழ்ந்தது. அதற்குள்ள சமுதாய அமைப்புகளும், நாகரீக வளர்ச்சியும் மற்ற நாடுகளோடு ஒட்டி இருக்கவில்லை.

வடக்கே பெரும் பெரும் படையெடுப்புகள்; சூறாவளிப் போர்கள்; சூழ்ச்சிப் புயல்கள்— ஆனால் எதுவும் திராவிடத்தைப் பாதிக்கவில்லை.

அசோகனின் பௌத்தமும், அக்பரின் ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமையும், அவுரங்கசீபின் அபாரப் போர்முறையும் திராவிடத்தின் வழியை மாற்றுமளவு விந்தியத்தைத் தாண்டி வரவில்லை.

இருந்தும் இந்திய உபகண்டம் பூராவும் ஹிந்து மதமும், அதன் குருமார்களின் ஆதிக்கமும், நாடு பூராவும் பரவியிருக்கக் காரணம் என்ன?

வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஒரு குடைகீழ் கொண்டுவரும்போது எல்லா இந்தியாவிலும் ஹிந்து மதமும், அதன் பழக்க வழக்கங்களும் பரவியிருக்கக் காரணம் என்ன?

பிராமணீயம் எந்தப் பகுதியிலும் ஆதிக்கம் செலுத்திவரக் காரணம் என்ன?

"வடமொழி" என்கிறார் உயர் நீதிமன்ற நீதிபதி மாக் அவர்கள்! ஆனால் அவர் திராவிட இயக்கப் பிரச்சாரம் செய்ய சிதம்பரம் போனவரல்ல! இறந்துபோனவரின் செயல்

பற்றி புகழச் சென்றவர். அவர் கூறுவதை நீங்களே கேளுங்கள் :

“ அரசியல் வழியாகவும், ஆட்சிமூலமாகவும் ஒன்றுபடாமல், தனித்தனி நாடுகளாகவும், வெவ்வேறு மொழியைப் பேசிக்கொண்டும், ஒன்றுக்கொன்று செல்ல போதியவாகனவசதி கள்கூட இல்லாத காலத்தில் வளர்ந்து நின்ற இந்த ஒற்றுமை (இந்து மதப் பழக்க வழக்கங் கள்) உலகத்தில் நிகழ்ந்த அதிசயங்களில் ஒன்ருகும்! இந்த அதிசயம் நிகழக் காரணம் குறித்து வரலாற்று ஆராய்ச்சிகள் தேவை யில்லை. தெள்ளத் தெளிவாகவே தெரிகிறது. அந்தக் காலத்தில் வாழ்ந்த மத குருமார்களுக் குள் இருந்த ஒற்றுமையும், உறுதிப்பாடும் தான். தெய்வீக மொழியைக் கையாண்ட அவர்களுக்குள் இருந்த கட்டுப்பாடு காரண மாகத்தான், இமயம் முதல் குமரிவரை வாழ்ந்த மக்களின் எண்ணத்திலும், செயலிலும் அவர் களால் ஆதிக்கம் புரிய முடிந்தது. மக்கள் பிறந்தது முதல் இறக்கும்வரை அந்த மதகுரு மார்களின் கட்டளைக்கு அடங்கியே வாழ்ந்து வந்தனர்!’’

விடுதலைப்பட்ட இந்தியாவில், இந்திய மொழி, இனம், நாடு என்று ஒற்றுமை கீதத் திற்கு ஆக்கம் தேட வழிதேடி, விளக்கவுரை புகன்ற நீதிபதி மேற்குறிப்பிட்ட வரலாற்று உண்மையை வெளியிட்டார். தேசியத் தோழர்கள் நினைத்துப்பார்க்கவும் மறுக்கும், இந்த வரலாற்று ஏடுகள் நாட்டிலே நன்கு விளக்கப்படவேண்டியவை.

வெள்ளைக்காரன் வருவதற்குமுன் இந்திய உபகண்டம் ஒருபோதும் ஒன்றுபட்டிருந்த தில்லை.

பலமானதொரு சீசரோ, நெப்போலியனே தோன்ருத காரணத்தால் அல்ல.

இந்தியா ஒரு ‘உபகண்டம்’! அவ்வளவுதான் காரணம்.

பல்வேறு மொழிகளையும், இனங்களையும், கலாச்சாரங்களையும் இயற்கையாகவே கொண் டிருக்கும் வெவ்வேறு நாடுகள் அடங்கிய உபகண்டம், இந்தியா.

வெள்ளையன் அன்னியன். ஆதிக்கம் புரிய வந்தவன். ஆகவே இந்த உபகண்டத்திற்கு ஒரே அரசியல் அமைப்பை ஏற்படுத்தி ஒன்று பட்ட ஆட்சிமுறையை ஏற்படுத்திக் கொண் டான். சுமார் இரு நூற்றுண்டுகள் அவன் ஆட்சி நடந்தது.

அந்த ஆதிபத்திய ஆட்சியை எதிர்த்து எல்லா மக்களும் கூடினர். திராவிடனும் குரல் எழுப்பினன்; வங்காளியும் நிமிர்ந்து நின்ருன், மார்வாடி, குஜராத்தி எல்லோரும் போரா டினர்.

பொங்கி எழும் புரட்சிக்கனலை தாங்கமுடி யாது என்று அறிந்தவுடன், முன் நின்றவர் களைக் கூப்பிட்டு அதிகாரத்தைக் கொடுத்து விட்டு போய்விட்டான். இந்த நிலையில் அதி கராபீடம் ஏறியவர்கள் நேர்மையோடு இருந் திருக்கவேண்டும்.

இன, மொழி, கலாச்சார பகுதிப்படி நாட் டைப் பிரித்து சுயநிர்ணய உரிமை கொண்ட அரசியல் அமைப்பை உண்டாக்கியிருக்க வேண்டும். அந்த நேர்மையான பாதையில் செல்லாமல், கோணல் வழியில் புகுந்தனர்.

எடுபிடிகளைச் சேர்த்துக்கொண்டு இந்துஸ் தானம் அமைத்தனர்.

‘பாரத்’ என்னும் இந்தியா ஏற்படுத்தப்பட் டது.

இந்திய இனம், மொழி, நாகரீகம் தேவை என்று முடிவு செய்யப்பட்டது.

வடவர்களுக்கு, இந்த முடிவு சரியானது தான்.

இனம் என்னும்போது அவர்களுடைய ஆரிய இனம்தான் அவர்கள் கண்முன் தெரி கிறது.

மொழி எனும்போது அவர்களுடைய இந்தி தான் ஆதிக்கம் பெறுகிறது.

நாகரீகம் என்று டெல்லி கூறுவதே காந்தி குல்லாயும், ஷெர்வாணியும்தான்.

தங்களுடைய இனம், மொழி, நாகரீகம் ஏற்றம் அடைவது கண்டு வடவர் பெருமகிழ்வு அடைவது இயற்கை. ஆனல் திராவிடம் அதை ஒப்புக்கொள்ளவேண்டுமென்பதும், அப்படி ஒத்துக்கொண்டால்தான் பாரத் பழம் பெருமையை அடையும் என்று வாதம் புரிவதும், பண்பு மறந்த திராவிடர்களுக்கு சரியெனப்படலாம்.

சேரன் செங்குட்டுவனையும், செருக்குடன் சுற்றியவர்களை அடக்கியாண்ட மறத்தமிழ் பரம்பரையையும் நெஞ்சில் கொண்டவர்கள் நிச்சயமாக ஒத்துக்கொள்ளமாட்டார்கள். அப் படிப்பட்ட தீய திட்டத்தை முறியடிக்க முரசம் கொட்டுவர்—கொட்டுகின்றனர்.

திராவிடம் நமது நாடு; இங்கே இந்திக்கு ஆதிக்கமில்லை; ஆரிய கலாச்சாரம் தேவையில்லை என்ற உரிமைக்குரல் எழுப்புகின்றனர்.

இந்த உரிமைக்குரலை அடக்க ஆளவந்தார்கள் அடக்குமுறை வீசுகின்றனர்; ஆள் பிடிக்கும் சட்டம் போடுகின்றனர்.

அதே நேரத்தில் நாட்டை ஒன்றுக்கும் சூழ்ச்சிகளை நிறைவேற்ற முயலுகின்றனர்.

இந்த ஆதிக்கப் பணிக்கு அவரால் ஆன கைங்கர்யமும் செய்திருக்கிறார் மாக் அவர்கள்.

இந்திய உபகண்டத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் அரசியல் ஒற்றுமை நீடிக்க வேண்டுமானால், நாட்டிலிருக்கும் பல்வேறு மொழிகளை ஒன்றுசேர்க்கும் வகையில் சீர்திருத்தம் செய்யவேண்டும். அதற்கு ஒரே வழி இந்தி, சமஸ்கிருதம், வங்காளி, குஜராத்தி முதலிய பல ஆரிய மொழிகளுக்கும், திராவிட மொழிகளுக்கும், பொதுவான எழுத்துக்களைக் கொண்டுவரவேண்டுமென்கிறார்.

பொதுவான எழுத்து இருந்தால், பல்வேறு மொழி பேசுபவர்களும் அரசியலில் ஒன்று சேர்ந்து இந்திய இனத்தை உண்டாக்குவர் என்று நம்புகிறார், நீதிபதி. காரணம் ஒரே எழுத்துள்ள சமஸ்கிருதத்தைக் கொண்டு பிராமணீயம் நாடு பூராவும் ஆதிக்கத்தோடு ஆண்டுவரவில்லையா என்கிறார்.

சரியான வாதம்தான். ஆனால் நிலைமைக்கு நேர்மாறானது!

ஒரேமாதிரியான எழுத்துகள் இந்த உபகண்டத்தை ஒன்றுசேர்த்துவிட முடியுமா என்பதை ஆராயுமுன், அம்மாதிரி எங்கேயாவது ஒன்று சேர்த்ததா என்று வரலாற்று ஏட்டை புரட்டிப்பாருங்கள்.

ரோமன் எழுத்துக்களைக் கையாளும் ஐரோப்பியக் கண்டம் எத்தனை நாடுகளாக இருக்கின்றது?

ஜெர்மனியும், பிரெஞ்சும், ஆங்கிலமும் ஒரே எழுத்து வடிவங்களைக் கொண்டவைகள்தான். ரஷ்யாவும், அமெரிக்கர் பேசும் ஆங்கிலமும் ஒரேவகை எழுத்துக்களைக் கொண்டவைகள் தாம். ஆனால் இந்நாடுகள் ஒன்றாகவா இருக்கின்றன. வெவ்வேறாக மட்டுமல்ல; நேருக்கு நேர் எதிர் முகாமில் இருந்துகொண்டிருக்கின்றன. இன்று நேற்றல்ல; 2 நூற்றாண்டுகளாக!

நீதிபதி மாக் எண்ணுவதுபோல 'எழுத்துக்கள்' எந்தக்காலத்திலும் இன, மொழி, கலாச்சார வேற்றுமைகளை மறைத்துவிடமுடியாது.

எழுத்துக்கள் ஒன்றானபோதிலும், லத்தீன் மொழியில் இருக்கும் பைபிளைப் படிக்கமாட்டோம், ஆங்கில பைபிள் தேவை என்றனர் பிரிட்டிஷ் தீவுகளில் வசித்த உரிமை வீரர்கள். அதுபோல எழுத்துக்கள் ஒன்றானாலும் இந்தி, இந்திதான்; தமிழ், தமிழ்தான்! இரண்டும் முற்றிலும் வெவ்வேறான, ஒன்றுக்கொன்று நேர் எதிரான இன, கலாச்சார பண்பை விளக்கும் மொழிகள்.

இனக், கலாச்சாரப், பண்பாட்டால் பிரிந்து நிற்கும் இரு நாடுகளைக் கூட்டிவைத்து, ஒன்றுக்கு மற்றது அடிமையாக வேண்டுமென்று கூறுவது அறிவுக்குப் பொருந்தாதது மாத்திரமல்ல; நடக்காதது.

நோய் என்னவென்று தெரிந்துகொள்ளாமல், கொடுக்கப்படும் மருந்துபோல இருக்கிறது, இந்த வாதம்.

சென்ற இருநூறு ஆண்டுகளாக ஐரோப்பிய கண்டத்தை ஒரு குடைகீழ் கொண்டுவரப்பாடுபட்ட மாவீரர்களின் கதையும், ராஜதந்திரிகளின் வரலாறும் இந்த நேரத்தில் கவனத்திற்கு கொண்டுவரப்படவேண்டியவைகளாகும்.

இன்று உலகத்தில் ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. (முழு விபரம்-கடைசிப் பக்கம் காண்க) அவைகளுக்கெல்லாம் பொதுவான எழுத்துமுறை வந்துவிட்டால் உலகம் ஒன்றாகிவிடுமென்று நினைத்தால் எவ்வளவு தவறான எண்ணமோ, அதைவிடத் தவறு இந்தியாவை பொது எழுத்துக்களால் ஒன்றாக்க எண்ணுவது.

எழுத்துச் சீர்திருத்தம் தேவைதான். உலக மொழிகள் அத்தனைக்கும் ஒரே எழுத்து வடிவம் அமைந்தால் மாணக்கர் பயனடைவர்; அறிவு வளரும்; மனித சமுதாயமே முன்னேறும்.

ஆனால் அந்த நல்லகாரியம் இனப்பண்பையே அழித்துவிடும் என்று கனவுகாண்பது வரலாற்றை மறந்த பேச்சு.

நீதிபதி மாக்கும், அவரைப்போல ஆசைப்படும் தேசியத் தோழர்களும் இந்த உண்மையை மறந்துவிடக்கூடாது, இனப்போரைத் தடுத்து, இனத்தை இனம் அடக்கியாண்ட வரலாறு இன்னும் எழுதப்படவில்லை!

பனிவெளியில்

[இரா. செழியன்]

காலைக் கதிரவனின் இளங்கதிர்கள் அறையினுள் விழ ஆரம்பித்தன. கமலநாதன் இன்னும் படுக்கையைவிட்டு எழவில்லை. தலையை வாரி முடிந்துகொண்டு, தங்கம் உள் நுழைந்தாள். அவளுடைய கணவன் படுக்கையில் கிடக்கும் கோலத்தைப் பார்த்ததும் அவள் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. சிறு குழந்தை உறங்குவதைப் போன்றிருந்தது, கமலநாதன் படுத்திருந்தது. "ஓ! அமைதி அழகு! அவரைப்பார்த்துக்கொண்டிருந்தாலே போதும் என்று தோன்றுகிறது!" என்று தங்கம் மனதினுள் நினைத்துப் பூரிப்படைந்தாள். மெதுவாக, அடிமேல் அடிவைத்துப் படுக்கையின் தலைப்பக்கத்தில் உட்கார்ந்து, அவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். நிதானமாக மூச்சு வந்து போய்க்கொண்டிருந்தது. திடீரென்று அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது. அவர் என்ன கனவு கண்டாரோ? அந்தக் கனவில் அவள் வந்தாளோ? "தனது கணவனின் கனவில் பெண்ணொருத்தி நடமாடினால், தன்னைத் தவிர வேறு யாராக இருக்கமுடியும்?" என்று தங்கம் நினைத்துக்கொண்டாள். பரந்துகிடந்த தலைமயிரை, தன் தளிர்க்கரங்களால் அவள் வருடிவிட்டாள். காதருகே குனிந்து, "அத்தான்! அத்தான்!" என்று கொஞ்சு மொழிகளை உதிர்த்தாள்,

கமலநாதன் லேசாகக் கண்விழித்தான். தலைமயிரை வருடிக்கொண்டிருந்த கரத்தைக் கன்னத்தில் அணைத்துக்கொண்டு அவன் புரண்டு படுத்தான்.

"எழுந்திருங்கள் நாழியாகிவிட்டது."

"உம்!"

"சரி! நான் போகிறேன்" கையை விடுவித்துக்கொண்டு தங்கம் எழுந்தாள்.

"எங்கே போகிறாய்?"

"ஷிமே."

"ஷிமேயா? நீ எங்கே இருக்கிறாய்?" என்று கண்ணைத் துடைத்துக்கொண்டான் கமலநாதன். "நான் வேறு எங்கேயோ—தோட்டத்தில் இருப்பதாகநினைத்துக்கொண்டேன்."

"கனவு! உங்களுடன் யார் இருந்தது,"

"தோட்டத்தில் மரங்கள், செடி, கொடி, தூரத்தில் ஒரு கன்னுக்குட்டி."

"இல்லையில்லை, உங்களுடன் பேசிக்கொண்டிருந்தது."

"அவள் என்னுடன் பேசவில்லை, நானும் அவளுடன் பேசாமல், அவளைப் பார்த்துக்கொண்டிருந்தேன்."

"அந்த அவள் யார்?"

"உனக்கும் அவளுக்கும் எவ்வளவோ வேறுபாடு இருக்கிறது!"

"எனக்கும் அவளுக்கும்! உம், கனவு உங்களை அவ்வளவு தூரம் அழைத்துக்கொண்டு போகிறதா?"

"அப்பா! நீ எவ்வளவு கோபக்காரியாக பிடிவாதக்காரியாகச் சண்டைபோடுகிறாய்! என் கனவில் வந்த தங்கம் மிக சாந்தமாக, அடக்கமாக இருந்தாள்."

"நீங்களும் உங்கள் கனவும்! நான் போகிறேன்" என்று தங்கம் வெளியேறினாள்.

மணி 7-35 காண்பித்தது. அன்று எட்டு மணிக்கெல்லாம் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியிருந்தது. முதல் நாள் கக்குவான் இருமலுடன் வந்த குழந்தை—தனிவார்டில் 8-வது நம்பர் படுக்கை—அவன் நிலை இப்

பொழுது எப்படியிருக்கிறது என்று தெரியவில்லை. மற்றொரு குழந்தை—காலில் பச்சை வாதத்தால் முடக்கப்பட்டிருந்தது. அந்தக் குழந்தையை டாக்டர் சஞ்சீவியிடம் இன்று காண்பிக்கவேண்டும். தங்கம் தன் குறிப்புப் புத்தகத்தைப் பார்த்துக்கொண்டாள்.

“நான் போய்வருகிறேனம்மா!” மாடிப்படிக் கருகில் ஒரு குரல் கேட்டது. குழந்தையை வைத்துக்கொண்டு சகுந்தலா நின்றாள். அவர்கள் இரவு தங்கியதை தங்கம் மறந்துபோய் விட்டாள் என்றே சொல்லவேண்டும்.

“குழந்தையை இப்படிப் படுக்கவை! வெளிச்சத்தில் பார்க்கலாம்” குழந்தையை மேஜையின்மேல் படுக்கவைத்தாள். குழந்தை இன்னும் கண் மூடியபடி இருந்தது. தங்கம் நன்றாகப் புரட்டிப் பார்த்தாள். உடலில் எந்தக் காயமும் காணப்படவில்லை. கால் மட்டும் வளைந்திருந்தது, குழந்தையின் இரண்டு கால்களையும் சேர்த்து வைத்துப் பார்த்தாள் தங்கம். வளைவு நன்றாகத் தெரிந்தது. வைடமின் குறைவு—கர்ப்பவதியான தாய்க்கு பலவீனமும் ஆகாரத்தில் சத்துக் குறைவும் இருந்தால், பிறக்கும் குழந்தைக்கு இந்தக் கால்வளைவு உண்டாகும். பிறகு தகுந்த மருந்து கொடுத்தால் அது சரியாய்விடும்.

தங்கம் ஒரு மருந்தை எழுதிக்கொடுத்து “இந்த மருந்தைக் கொடு! மறுபடியும் இங்கு வந்தால் என்னிடம் குழந்தையைக் காண்பி!” என்று சொன்னாள். குழந்தையை எடுத்துக் கொண்டு தாய் புறப்பட்டாள்,

“எங்கு போகிறாய்?” கடைசியாகத் தங்கம் கேட்டாள்.

சகுந்தலா சற்று திகைத்து நின்றாள், கேள்வி கேட்டவரையும் கையில் இருக்கும் குழந்தையையும் பார்த்தவண்ணம். “எங்கு போகிறேன். எனக்கே தெரியவில்லை” என்று அவள் முகத்தைத் தாழ்த்திக்கொண்டாள். கன்னத்தில் நீர் வடிவது தெரிந்தது.

அந்தக் கேள்வி அவள் வருத்தத்தை எப்படித் தூண்டியது என்று தங்கத்திற்குப் புரியவில்லை. ஒரு பெண்—ஒரு தாய் குழந்தையைக் கையில் வைத்துக்கொண்டு அழுவதைப் பார்க்கத், தங்கத்துக்கு மனம் சங்கடப்பட்டது. பாவம்! எந்தக் கஷ்டமோ, அந்த இளந்தாயை வாட்டுகிறது என்று தெரிந்தது. “அழாதே அம்மா! அப்படி உட்கார்! உன்னுடைய கணவன்வீடு...” என்று தங்கம் ஆரம்பித்ததும், “டாக்டர்! என் கணவர் இறந்துவிட்டாரென்று முன்பே கூறினேனே!” என்று பெண் பதிலளித்தாள். தன் இறந்த கணவனைப்பற்றி பேச்செடுப்பதே அவளுக்குப் பிடிக்கவில்லைபோலத் தோன்றியது.

“உன் அப்பா, அம்மா...” என்று தங்கம் இழுத்தாள்.

“அவர்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கே கஷ்டப்படுகிறார்கள். நானும் குழந்தையும் போனால், இன்னும் அதிக பாரந்தான். நான் எங்கேயாவது வேலைதேடிப் போகிறேன்.”

“வேலையா? உனக்கு என்ன வேலை தெரியும்,”

“நான் பள்ளிக்கூட வாத்தியாராக இருந்தேன்.”

“அது ஏன் போய்விட்டது?”

“ஆறுமாதம். தற்காலிக வேலை. அதற்கப்புறம், வேலை தேடி இங்கு வந்தேன். அலைச்சல் மிகுதியால், மயக்கம்போட்டு கீழே விழுந்தேன். பின் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டேன்.”

“தங்கத்திற்கு ஒரு யோசனை தோன்றியது. ஆஸ்பத்திரியை அடுத்து இருக்கும், அரசாங்க அனாதைச் சிறுவர் இல்லத்துக்கு ஒரு ஆசிரியர் தேவையிருந்தது. அதை டாக்டர் சஞ்சீவியிடம் கேட்டுப் பார்க்கவேண்டும், “இங்கு ஒரு வேலை காலியிருக்கிறது. ஆனால் சம்பளம் மிகக் கொஞ்சமாக இருக்கும். தொல்லையும் அதிகம். அதனால்தான் யாரும் அதிகம் தங்குவதில்லை.”

“அப்படியா!” என்று ஆவலுடன் அந்தப் பெண் கேட்டுக்கொண்டாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி மலர்வதை முதல்தடவையாகத் தங்கம் பார்த்தாள். தாய் இளங்குழந்தையை சற்று நெருக்கமாக அணைத்துக்கொண்டாள். “எந்த வேலையாவது! எனக்கும் குழந்தைக்கும் போதுமானதாக இருந்தால் போதும்.”

“சாப்பாடும் இடமும் இனமாகக் கிடைக்கும் சம்பளம் இருபத்தைந்து அல்லது முப்பது தான் இருக்கும்.”

“நீங்கள் செய்கிற உதவியை நான் எப்பொழுதும் மறக்கமாட்டேன்!” என்று குழந்தையை மேஜைமேல் வைத்துவிட்டு, தங்கத்தின் காலடியில் அவள் குனிந்தாள் தங்கத்திற்கு இது அதிகமாகத் தோன்றியது. “சே! இப்படியெல்லாம் செய்யக்கூடாது. நான் போய் இன்னொரு டாக்டரைக் கேட்கவேண்டும். வேலை கிடைத்தாலும் கிடைக்கலாம். இல்லாமற் போனாலும், போகலாம்.”

"பரவாயில்லையம்மா! வேலை கிடைக்காவிட்டாலும் பாதகமில்லை. எனக்கு உதவி செய்ய வேண்டுமென்று நீங்கள் நினைத்ததற்கே எனது நன்றி."

அன்று மாலை அநாதைச் சிறுவர் இல்லத்திற்குள் டாக்டர் தங்கம் சகுந்தலாவை அழைத்துச் சென்று அங்கு வேலைபார்க்கும் மற்றவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தாள். சகுந்தலா அவளுடைய இரண்டு அறை வீட்டில் குடியேறினாள்.

*   *   *

தருமலிங்கம் கொலைவழக்கின் வாதப்பிரதிவாதங்கள் அன்றைய தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது. குற்றவாளிகளுக்காக அட்வகேட் ஏகாம்பரம் வாதாடினார். சர்க்கார் தரப்பில் குற்றஞ்சாட்டும் பப்ளிக்பிராசிகியுடர் கமலநாதன் தன் குறிப்புகளைச்சரிபார்த்துக்கொண்டிருந்தான்.

அன்றைக்கு வந்த வழக்கு—தருமலிங்கம் கொலை வழக்கின் விபரம், தருமலிங்கம் என்பவன் ஒரு பலசரக்குக் கடை வைத்திருந்தான். அவனுடைய மனைவி பாலாமணி (வழக்கில் இரண்டாவது எதிரி) என்பவளுக்கும், சொக்கலிங்கம் (முதல் எதிரி) என்பவனுக்கும் கள்ள நட்பு இருந்ததாம். இதனைக் கண்டுகொண்ட தருமலிங்கம் பாலாமணியை வீட்டைவிட்டு விரட்டிவிட்டான். கொலை நடந்த அன்று காலை, சொக்கலிங்கமும் அவனைச் சேர்ந்த பதினான்கு எதிரிகளும் கம்பு, அரிவாள் சகிதம் வந்து தருமலிங்கம் வீட்டை முற்றுகைபோட்டனர். தருமலிங்கம் அப்பொழுது வீட்டிலில்லை, வெளியூர் போயிருந்தான். மாலை அவன் வருகிற வழியில் காத்திருந்து, அவனை மடக்கி, சொக்கலிங்கமும் அவனைச் சேர்ந்தவரும் நன்றாக அடித்துவிட்டதன் காரணமாக தருமலிங்கம் இறந்துவிட்டான். அதன் பிறகு, சொக்கலிங்கம், பாலாமணி உட்பட பதினாறு பேர்கள்மீது போலீசார் குற்றஞ்சாட்டி, வழக்குத் தொடுத்தனர். குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் ஒருவன் அப்ரூவராக மாறிவிட்டான். இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு கடைசியில், வக்கீல்களின் வாதம் மட்டும் மிகுந்திருந்தது.

அட்வகேட் ஏகாம்பரம் தனது வாதத்தைத் துவக்கினார். "கனம் நீதிபதியவர்களே! பிராசிகியுஷன் தரப்பில் மிகக் கஷ்டப்பட்டு, ஆனால் மிகத் திறமையுடன் ஒரு வழக்கை ஜோடித்திருக்கிறார்கள். உண்மையாகவே ஒரு குற்றஞ் செய்யப்பட்டிருந்தால், கிடைக்கக்கூடியதைவிட அதிகமான சாட்சியங்களை சேகரித்திருக்கின்றனர். அவற்றைக் கவனி தாலே, வழக்கு எந்த அளவுக்குப் பலவீ மானது என்பதை உணரலாம்.

பிரஸ்தாப நாள் காலையில் சொக்கலிங்கமு மற்றும் சிலரும் தருமலிங்கத்தைத் தேடிவ தது, மாபெருங் குற்றமாக ஆக்கப்பட்டிரு கிறது. பிராசிகியுஷன் சாட்சிகளில் பல இதை மீண்டும் மீண்டும் சொல்லியிருக்கின் னர். தருமலிங்கம் அவன் மனைவியை கொடுமைப்படுத்தி, வீட்டைவிட்டுத் துரத் யிருக்கிறான். சொக்கலிங்கம் அவர்களுக்கு தூரத்து உறவு. எனவே குடும்பத்துச் சண் டையைத் தீர்த்துவைத்து, அவர்களிடையே சமாதானத்தை உண்டாக்க முயற்சித்திரு கிறான். அவனுடைய நல்லெண்ணம் மிக தவறாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. எதி தரப்பு சாட்சிகள் 14, 15 மிகக் கண்ணியமா வர்கள். அவர்களுடைய சாட்சியத்தில், முதல் நாளிரவு தருமலிங்கத்தைக் கண்டுபேசி சமா தானம் செய்யவேண்டுமென்று சொக்கலிங்க பேசிக்கொண்டிருந்ததாகக் கூறியிருக்கிறா கள். 1-வது 3-வது 4-வது எதிரிகள் அன்று காலை 'இதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்று கூறப்பட்டதாகவும், அதை முக்கி மாக வைத்துக்கொண்டு, தருமலிங்கத்தை கொலைசெய்யவே அவர்கள் வந்தார்கள் என்று பிராசிகியுஷன் ஊகிக்கிறது. மு உண்மையும் தெரியாமல் ஊகிப்பது ஆபத்து அதிலும் உண்மையைத் தெரிந்துகொள் மறுத்து, ஊகத்தில் எல்லாவற்றையும் கண கிடுவது பேராபத்து.

கொலை நடந்ததாகக் கூறப்படும் நேரம் சற்று இருட்டியிருந்த வேளை. தருமலிங்கத்தை பின்னாலிருந்து தாக்கியதாகக் கூறப்படுகிறது இருட்டு வேளை—பின்னாலிருந்து தாக்குதல் எப்படி இறந்துபோனவரால், தன்னைத் தா கியவர்களை அடையாளங் கண்டுபிடிக்க முடி ததென்று தெரியவில்லை. மரண வாக்குமூலத் தில், முதல், மூன்றாவது, நான்காவது எதி கள் தன்னைத் தாக்கியதாக இறந்தவர் சொ லியிருக்கிறார். தாக்கப்பட்ட நிலையில், அவ ருடைய நினைவு சரியான நிலையில் இருந்திருக் மென்று கூறமுடியாது. எனவே மயங்கி நிலையில், மரணவாக்குமூலத்தைக் கொடுக்கு படி நிர்ப்பந்தப்படுத்தப்பட்ட நேரத்தில், மரண வாக்குமூலத்தில் ஏதேதோ பெயர்களை அவ கொடுத்துவிட்டார். மரண வாக்குமூலம் கொடுத்த இரண்டுமணி நேரத்துக்கெல்லாம் அவர் இறந்துபோய்விட்டார். இறந்துபோகும் இரண்டு மணி நேரத்துக்குமுன் ஒருவனுடைய

மனநிலை எப்படியிருந்திருக்கும்? உயிரடங்குவதற்கு இரண்டுமணி நேரத்துக்குமுன், அவனுடைய ஞாபகம், உணர்வு எல்லாம் சிறுகச் சிறுக மங்கிப்போயிருக்காதா? உடலும், உள்ளமும் மிகத் தளர்ந்து, சோர்வடைந்து, இருந்த நேரத்தில் வாக்குமூலம் வாங்கப்பட்டுள்ளது. எனவே மரணவாக்குமூலத்தை வைத்துக்கொண்டு, வழக்கை முடிவுசெய்வது கூடாத காரியம்.

பதினாறு எதிரிகள் பேரிலும், இ. பி. கோ. 149-வது சட்டப் பிரிவின் கீழ் கலகம் விளைவித்ததாகவும் பிராசிகியூஷன் கூறுகிறது. தருமலிங்கத்துக்குப் புத்திமதிகூறி, அவனுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்த, முதல், மூன்று, நான்கு எதிரிகள் வந்திருக்கின்றனர். இறந்துபோனவர் தன் மனைவியைக் கொடுமைப்படுத்தி வெளியில் துரத்தியடித்தது, அக்கம்பக்கத்திலிருப்பவர்களுக்குத்தெரியுமாகையால், அவர்கள் வேடிக்கை பார்க்க வந்திருக்கின்றனர். இதைப் பெரிதுபடுத்தி, பக்கத்தில் வேடிக்கை பார்த்தவர்களையும் வழக்கில் ஈடுபடுத்தி, அவர்களைத் தண்டிக்க முயலுவது சரியானதல்ல.

தருமலிங்கம் தாக்கப்பட்டு இறந்துபோனது உண்மை. ஆனால் அதற்காக சிறிதுகூடச் சம்பந்தமற்றவர்களை வழக்கில் இழுத்து. 'இதோ ஒருவன் கொலை செய்யப்பட்டான்; அதற்காக நாங்கள் யாரையாவது தண்டித்தாகவேண்டும்' என்று குற்றமற்றவர்களைத் தண்டிக்க முயற்சிப்பது நீதியாகாது. குற்றம் நடந்துவிட்டது. செய்தவர்களைக் கண்டுபிடித்து நன்றாகத் தண்டிக்கவேண்டும். அதற்கு யாரும் தடைசொல்லப்போவதில்லை. நடந்த குற்றத்துக்குத் தண்டனை தரவேண்டுமென்ற ஒரே ஆவலுடன், பழிபாவமற்றவர்களைக் குற்றவாளிகளாக்குவது, நீதியின் தன்மையையும், சட்டத்தின் நோக்கத்தையும் அவமதிப்பதாகும். எனவே இந்த வழக்கில் சிக்கல் ஏதும் கிடையாது, சந்தேகம் என்பதற்கும் இடம் கிடையாது. குற்றஞ் சாட்டப்பட்ட எல்லா பிரிவுகளின்படியும், இவர்கள் எல்லோரும் குற்றமற்றவர்கள். வழக்கின் தீர்ப்பும் இதை வலியுறுத்துமென்பதை நான் முற்றிலும் நம்புகிறேன்."

எதிர்த்தரப்பு வக்கீல் தனது வாதத்தை முடித்தார். குற்றவாளிக்கூண்டில் நின்றவர்களுக்கு தங்கள் வக்கீல் பேசியது புரியவில்லையென்றாலும், தங்களுக்காக அவர் நல்ல முறையில் பேசியிருக்கிறார் என்ற திருப்தி இருந்தது.

அரசாங்கப் பிராசிகியூடர் கமலநாதன் தனது வாதங்களைப் புரிய எழுந்தான். "கனம் நீதிபதி அவர்களே! எதிர் தரப்பு வழக்கறிஞர், எனது நண்பர், மிகத் திறமையாக எதிரிகளுக்காகப் பரிந்து பேசியிருக்கிறார். சுவற்றிலே ஊற்றப்பட்ட தாரின் கருமையை வெள்ளையைப் பூசி மறைக்க முயலுவதுபோல, செய்யப்பட்ட குற்றங்களைத் தனது வாதத் திறமையால் மறைந்துவிட முயன்றிருக்கிறார். ஆனால் ஊற்றப்பட்ட கருப்புத்தார் அதிகமாகயிருந்தால், எவ்வளவுதான் வெள்ளைத் தண்ணீரை மேல் தெளித்தாலும், கருமை அழியாமலிருக்கும். அதைப்போல, செய்யப்பட்ட குற்றம், இழைக்கப்பட்ட கொடுமை, கொட்டப்பட்ட இரத்தம் அதிகமானது அதை வெறும் வாதத்தின் பலத்தால் மறைத்துவிட முடியாது.

வழக்கு விபரங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றன. இறந்துபோனவனின் மனைவி இரண்டாவது எதிரி. இரண்டாவது எதிரியும் முதல் எதிரியும் கள்ள நட்புக்கொண்டிருந்தனர். கொலை நடந்த முதல் நாள் கணவனும் மனைவியும் சண்டையிட்டிருக்கின்றனர். காரணம் நான் சொல்லத் தேவையில்லை. பன்னிரண்டாவது சாட்சி கூறுவதைக் கவனிக்கலாம். 'ஒருவரை யொருவர் திட்டிக்கொள்ளும் சத்தம் கேட்டு, நான் வீட்டினுள் போனேன். ஒழுக்கங் கெட்டவளே! வீட்டில் இனி இருக்காதே! ஓடிப்போ உன் அப்பன் வீட்டுக்கு' என்று இறந்துபோனவன் இரண்டாவது எதிரி பாலாமணியைத் துரத்தினான், பாலாமணியின் நடத்தைபற்றி எங்களுக்கெல்லாம் தெரியுமாகையால், நான் எதுவும் கேட்காமல், தருமலிங்கத்தைச் சமாதானப்படுத்திவிட்டு வந்தேன்" பன்னிரண்டாவது சாட்சி இறந்தவனின் பக்கத்துவீட்டில் இருப்பவர். தருமலிங்கம் இல்லாத சமயங்களில், சொக்கலிங்கம் மறைவாக வந்துபோவது, கொண்ட கணவனைவிட்டு இரண்டாவது எதிரி கண்டவர்களுடன் கூடித்திரிவது, இவைகளெல்லாம் அண்டை அயலில் இருப்பவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால் பாவம்! இறந்துபோனவனுக்குக் கடைசியில்தான் அதுதெரிந்தது. மானத்தை இழந்த அவன் மனைவியை வீட்டைவிட்டு வெளியேற்றினான்.

இந்த நிலையில் அட்வகேட் ஏகாம்பரம் எழுந்து "கனம் நீதிபதியவர்களே! மன்னிக்க வேண்டுகிறேன். இரண்டாவது எதிரியின் நடத்தைபற்றி விசாரிக்க ஏற்பட்டதல்ல இந்த வழக்கு. மேலும் இரண்டாவது எதிரிமீது வழக்குப் புறம்பான பழிகளைச் சுமத்துவதால் எதிரிகளைப் பற்றித் தப்பபிப்பிராயம் ஏற்படச்

செய்வதுடன், கோர்ட்டாரின் கவனத்தை வேறு பக்கம் திருப்புவதாகவும் இருக்கிறது என்று கருதுகிறேன். கொலை சம்பந்தம் பற்றி மட்டும் தனது வாதத்தை அரசாங்க பிராசிகியுடர் வைத்துக்கொண்டால் நல்லது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று கூறிவிட்டு உட்கார்ந்தார்.

கமலநாதன் சிறிது தாமதித்துவிட்டுப் புன்னகையுடன் ஆரம்பித்தான். "நான் கூறியவற்றை எதிர்தரப்பில் வாதாடும் என் நண்பர் மறுக்கவில்லை, அவரது சாட்சியங் களும் மாறுபட்டுக் கூறவில்லை. ஆனால் அது வழக்குக்குப் புறம்பானது, தேவையற்றது என்று கூறுகின்றார். இரண்டாவது எதிரியின் ஒழுக்கக்கேடு, அதன்மேல் எழுந்த சண்டைப் பேச்சு, இவைதாம் கொலைக்குக் காரணமாக இருந்தவை.

நான் சொல்வது வீண் பழி, வழக்கின் கவனத்தை வேறுபக்கம் திருப்புவது என்று நண்பர் வாதிடுகிறாரே! கணவன் வீட்டை விட்டு வெளியேறியதும், இந்த வனிதாமணி, எங்கு சென்றாள்? தந்தை வீட்டுக்குச் சென்றாளா? அல்லது வேறு நெருங்கிய உறவினர் வீட்டுக்குச் சென்று, தன் குறையைச் சொல்லி பரிகாரம் தேடினாளா? இல்லை, நேராக முதல் எதிரி வீட்டுக்குப் போயிருக்கிறாள். அதுமட்டுமல்லாமல், அன்று இரவு பூராவும் அவன் வீட்டில் கழித்திருக்கிறாள். அவர்கள் இருவர் களைத்தவிர, வேறு யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. நான் அதிகம் கூறத் தேவையில்லை. தன் ஒழுக்கக்கேடு கணவனுக்குத் தெரிந்துவிட்டதும், கள்ளக் காதலனிடம் சென்றுவிட்டாள், தன் கணவன் சொல்லிய வசவுகளை—இருவரைப் பற்றியும் சொல்லியவைகளை—கேட்டதும் முதல் எதிரி கோபங்கொண்டு, 'தருமலிங்கத்துக்கு நல்லபாடம் கற்பிப்பதாகக் கூறி, மூன்றாவது, நான்காவது, எட்டுமுதல் பன்னிரண்டு, பதினான்கு, பதினாறு எதிரிகளை அழைத்துக்கொண்டு, தருமலிங்கத்தின் வீட்டுக்குச் சென்றிருக்கிறான்.

கணவனுக்கும் மனைவிக்கும் ஏற்பட்ட சண்டையைத் தீர்க்க, தருமலிங்கம் வீட்டுக்கு முதல் எதிரி போனதாக எனது நண்பர் வாதிடுகிறார். குடும்பத் தகராறைத் தீர்த்து, சமாதானத்தை உண்டாக்க எதிரிகள் போனது உண்மையானால், அவர்கள் கைகளில் வெட்டுக்கத்தியும், அரிவாளும், வேலும் கம்பும் ஏன் வந்ததென்று புரியவில்லை. இவையெல்லாம் சமாதானத்தை உண்டாக்கும் சாதனங்கள் என்று கருதமுடியுமா? தன்னைப் பற்றி இழிவாகப்பேசிய தருமலிங்கத்தைத் தீர்த்துக்கட்டப்போவதாக வெளிப்படையாகவும் முதல் எதிரி பேசியிருக்கிறான்.

மரணவாக்குமூலத்தைப்பற்றிச் சில சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன எதிர்தரப்பு வழக்கறிஞர் நண்பரால். வாக்குமூலம் கொடுக்கும்பொழுது, தருமலிங்கம் சுய நினைவில் இருந்தானென்பதற்கு டாக்டருடைய சாட்சியும், உதவி மாஜிஸ்டிரேட் சாட்சியும் வெளிப்படையாக இருக்கின்றன. அடிபட்டதும் அவன் தெரிவித்தவைகளில் முன்னுக்குப்பின் முரண்பாடு எதுவும் காணக்கிடையாது. வாக்குமூலம் கொடுக்கும்பொழுது சுற்றிலும் இருந்தவர்களை அடையாளங் கண்டு பேசியிருக்கிறான். எனவே, எதிர்தரப்பு வாதத்தில் கூறப்படுவதுபோல, வாக்குமூலம் கொடுக்கும்பொழுது, அவன் மயங்கிய நிலையில் இருந்திருக்கலாம் என்று கூறுவது, உண்மைக்கு முற்றிலும் மாறுபாடானது. இறப்பதற்கு முன் ஒருவனுடைய நினைவு சிறுகச் சிறுக மங்கிவருமென்று வாதம் கிளப்பப்பட்டது. இயற்கையானச் சாவு வந்தால், அத்தகைய நிலை உண்டாகலாம். ஆனால், இந்தப் பரிதாபத்துக்குரியவன் இயற்கைச் சாவையடைய அனுமதிக்கப்படவில்லை. நல்ல வயதில், உடற்கட்டுடன் இருக்கும் நிலையில், அவன் கொலை செய்யப்பட்டிருக்கிறான் மிருகத்தனமாக. எனவே அபாயகரமான நிலையில் கொண்டுவரப்பட்ட தருமலிங்கம், வாக்குமூலத்துக்குச் சிறிது நேரத்துக்கெல்லாம் உயிர் துறந்தான்.

ஒன்றாவது, மூன்றாவது, ஐந்தாவது, எட்டாவது, ஒன்பதாவது, பதிமூன்றுமுதல் பதினைந்துவரையுள்ள எதிரிகள், முதலில் எதிரியைத் தாக்கியிருக்கிறார்கள். முதல், மூன்று, ஐந்து எதிரிகள் அரிவாளால் வெட்டியிருக்கிறார்கள். எக்ஸிபிட் பதினெட்டு, பத்தொன்பது இருபது அவர்களுடையது என்பது சந்தேகமற நிரூபிக்கப்பட்டுள்ளது. இரத்தக் கறை படிந்த வேட்டிகள், இன்னும் முக்கியமான ருசுக்களாக உள்ளன.

(தொடரும்)

'மன்றம்' சந்தா விபரம்

		உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்		6—0—0	7—8—0
ஆறு திங்கள்	..	3—0—0	
தனி இதழ்	,,	0—4—0	0—5—0

நவம்பர் – 7

1917-ம் ஆண்டு நவம்பர் திங்கள் ஏற்பட்ட ருஷியப் புரட்சியையும், அது வெற்றிபெற மக்கள் தலைவன் லெனின் செய்த சேவையையும் சமுதாய சீர்திருத்தத்தை விரும்பும் எவரும் எண்ணிப்பாராமல் இருக்கமுடியாது.

கொடுமையின் பிடியிலே மக்கள் சிக்கித் துவண்டனர்! மக்களை மறந்து அரசன் கோலாகலத்தில் மூழ்கிக்கிடந்தான்; கொள்ளை யடிக்கும் குருமார்களின் கொட்டம் வளர்ந்தது; பிரபுக்கள் படிப்பறியாப் பாமரர்களைக் கசக்கிப் பிழிந்து ஏழ்மையை உருவாக்கினர்கள். ஆலைகள் மூடப்பட்டன! வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது! விலைவாசிகள் ஏறின! வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டன! உணவுப் பஞ்சம், பட்டினிச்சாவுகள்! கொடுங்கோன்மைக்கு வந்த எதிர்ப்பு! தூக்கிலே துவண்ட இளைஞர்கள்! பிரபுக்களை எதிர்த்த அடிமைகள்! அவதிக்குள்ளான உழவர்கள்! அழுத்தப்பட்ட குரல்கள்! அடங்க மறுத்த வீரர்கள்! நாடுகடத்தப்பட்ட நல்லறிவாளர்கள்! மக்களுக்கு மதிப்பளித்த உயர்தர இலக்கிய ஆசிரியர்கள்! இவைதான் புரட்சிக்கு முன் இருந்த ருஷியா.

1917-ல் நவம்பர் திங்கள் 7-ம் நாள் மக்கள் சக்தி வென்றது. ஆட்சிமுறை கைப்பற்றப்பட்டது. கொடுமைகள் நீக்கப்பட்டன. உரிமை நிலைபெற்றது.

19-வது நூற்றுண்டின் இறுதியில் பிரான்சு நாட்டில் ஏற்பட்ட புரட்சி பாரைக் குலுக்கினலும் பயனற்றதாகவே முடிந்தது. சமூக அமைப்பு மாறவேண்டும் என்ற எண்ணம் நிறைவேறவில்லை. ஆனல் ருஷியாவில் மலர்ந்த மக்களாட்சி மணம் வீசிற்று. பிரெஞ்சுப் புரட்சியின்போது மக்கள் சக்தியை ஒன்று திரட்டி ஆட்சிமுறையை மாற்றியமைக்கக் கூடிய திறமை கொண்ட தலைவர்கள் தோன்றவில்லை. ருஷியப் புரட்சி வென்றது இயக்கத் தலைவனை லெனின் காட்டிய திறமையினல் தான். சிதறிக்கிடந்த சிந்தனையாளர்களை ஒன்றுசேர்த்தான். புரட்சிக்குச் சரியான சமயத்தை எதிர்பார்த்துதான் கிளர்ச்சியில் ஈடுபட்டான். பெற்ற வெற்றியை எண்ணி [illegible] திளைக் இறுமாந்து உட்கார்ந்துவிடவில்லை. நிதானத்தைக் கைவிடாமல் வெற்றி நிலைக்கும் வகையிலே பணியாற்றினன்.

லெனின் வெற்றியடைந்தது உலக வரலாற்றிலேயே மிகவும் ஆச்சரியமான பகுதியாகும். லெனின் வாழ்ந்த ஐம்பத்திரண்டு ஆண்டுகளில் 34 ஆண்டுகளை போராட்டத்திலே செலவிட்டார். ஆனல் மக்கள் தலைவனுக, சுதந்திர மனிதனுக ருஷியாவில் உலவியது ஐந்து ஆண்டுகளே. பெரும்பகுதி சைபீரியாவிலும், அயல்நாடுகளிலுமே வாழ்ந்துவந்தான். லெனினைப்போன்று சஞ்சலமும், சங்கடமுமடைந்த அரசியல் தலைவர் வேறு எவரும் இருந்திருக்க முடியாது. காவலனின் கணைகள் தன்னைத் தேடிய காலத்திலும், கட்சியினுள் பிரிவு ஏற்பட்டபோது தோல்வி மனப்பான்மை, தலைதூக்கிய நேரத்திலும், புரட்சிக்குப்பின் ஏகாதிபத்தியங்களின் கட்டுப்பாடு, பொருளாதாரச்சீரழிவு, உள்நாட்டுக் குழப்பம் இவைகளையும் லெனின் ஒருவரால்தான், திறமையாகச் சமாளிக்க முடிந்தது. லெனின் ருஷியப் புரட்சியின்போது தோன்றுமல் இருந்திருந்தால் புரட்சியின் முடிவே வேறு முனைக்குத் திருப்பப்பட்டிருக்கும்.

லெனினடைந்த வெற்றி போர்க்களத்திலல்ல. திடீர்த்தாக்குதல்களால் பெருவெற்றி கண்ட மாவீரர்களைப்போன்று அவர் புகழடையவில்லை. சமூகநோய் பிறந்த விதத்தை உணர்ந்ததால்தான் நோய் தீர்க்கும் முறையை எளிதில் கையாள முடிந்தது. தான் கற்றவைகளைக்கொண்டு புதுநிலைக்கேற்ப புதுவழிகளை அமைத்தார்.

ஆண்டுதோறும் நவம்பர் திங்கள் 7-ம் நாள் ரஷியாவில் வெற்றித் திருநாளாகும். வீரர் பவனிவருவர் வெற்றி விழா கொண்டாடுவர். அன்று மாவீரன் லெனின் மாண்பு பேசப்படும்.

சமூக அமைப்பில் மாற்றங் காணவிழையும் நமக்கு நவம்பர் 7 விவேகம் அளிக்கும் திருநாளாகவே விளங்குகிறது.

வடவரின் பொருளாதாரப்பிடி நம்மைவிட்டு நீங்கவில்லை. சமூக அமைப்பில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், மூடப் பழக்கவழக்கங்கள் அகலவில்லை. அறியாமை இருள் நீங்கவில்லை. வளமை யிருந்தும் நமக்கு வாழ்வு இல்லை. கடல்கடந்தும் கண்ணீர் சிந்தும் நிலையில்தான் இருக்கின்றோம்.

[illegible]

ருஷியாவில் நவம்பர்—7! பிரான்சில் ஜூலை—14! நமக்கு அத்திருநாள் என்றோ?

அண்டசராசரம்-9

[இரா. செழியன்]

[இந்து மதத்தின் வேத, புராணங்களின்படி, அண்டசராசரங்களையெல்லாம் பிரமதேவன் படைத்தான். இவ்வளவு பெரிய பிரமாண்ட படைப்புக்கு ஆதாரமாக—அஸ்திவாரமாக ஒரு ஆமை வைக்கப்பட்டது. ஆமை முதுகின்மேல் அஷ்டதிக்கு யானைகளும், ஆயிரந்தலை ஆதிசேடனும் இருக்கின்றன. அவைகளுக்குமேல் ருத்ரர்கள் வசிக்கும் ருத்ரபுவனம் இருக்கிறது. ருத்ரபுவனத்துக்குமேல் புகைமண்டலம். புகைமண்டலத்துக்குமேல் வெட்டவெளி. அவற்றுக்குமேல் யமபட்டணங்களும், அதையடுத்து 28 கோடிநரகங்களும் நிற்கின்றன. நரகலோகத்தின்மேல் கூஷ்மாண்டபுவனம் அதற்குமேல் ஏழு பாதாளங்கள், அதையடுத்து ஆடகேசுரபுவனம். அதையும் கடந்தால் பூலோகம். பூலோகத்திற்கு உயரே புவலோகம் ஆரம்பிக்கிறது. புவலோகத்தில் மேகமண்டலங்களும், வீரசுவர்க்கமும், காந்தருவர் வித்தியாதரர்களும், கருடன், ஐராவதம் போன்றவைகளும் உள்ளன. புவலோகத்துக்கு மேல் சூரியலோகம். சூரியலோகத்துக்கு அப்பால் சந்திரலோகம். சந்திரலோகத்துக்கு மேல்நோக்கி, அடுத்தடுத்து முறையே, நட்சத்திரமண்டலம், செவ்வாய் மண்டலம், புதன் மண்டலம், பிரகஸ்பதி மண்டலம், சுக்கிரமண்டலம், சனிமண்டலம் முதலியன இருக்கின்றன. சனிமண்டலத்தில், சனிபகவானைத் தவிர, இராகு கேதுக்கள் இருக்கின்றன. அதற்கு மேலுள்ள சப்தரிஷி மண்டலத்தில், அத்திரி, வசிட்டர் முதலான ஏழு ரிஷிசிரேஷ்டர்கள் இருக்கின்றனர்......]

அகலிகையைப் பெறும் போட்டியில் கௌதம முனிவர் வெற்றிபெற்றார் என்று தெரிந்ததும், கடற்கரையில் கூடியிருந்தவர்களின் ஆரவாரம் அடங்கியது. இந்திரன் வெற்றிபெற்றான் என்ற போது காட்டப்பட்ட குதூகலம் எங்கோ மறைந்துவிட்டது. ஏனென்றால் அகலிகைக்கு ஏற்றவன் இந்திரன் என்று அவர்கள் நினைத்தனர். அந்த அழகு நங்கைக்கு இந்தக் காட்டுவாசி எந்தவகையிலும் பொருத்தமுடையவராகத் தெரியவில்லை.

அகலிகை போகபோக்கியங்களை அனுபவிக்கவேண்டியவள். அவளுடைய அழகுக்கு அரண்மனை வாழ்வில்—அம்சதூளிகா மஞ்சத்தில் இருக்கவேண்டியவள். இவர் யாரோ ஆரண்யவாசி, புதர்க்காடன்றி வேறு போக்கிடமற்றவர். அவருக்கா இந்தப் பூங்கொடி என்று கருதினர்கள். காட்டில் யாகாதி வேலைகளைச் செய்ய, முனிபுங்கவருக்குப் பணிவிடைபுரிய, ஒரு வேலையாள்—அடக்கமான சீடன் இருந்தால் போதும். அதற்காக, இந்த வேல்விழியாளை—கனிமொழியாளை அவர் ஏன் தேர்ந்தெடுத்தார் என்று புரியவில்லை.

அகலிகையின் வரவால் தேவலோகம் குதூகலித்திருக்கும், இந்திரனின் அரசமண்டபம் அழகுபெற்றிருக்கும். அந்த அழகு மங்கையை இந்த சாம்பல் பூசி—ஜடாமுடிதாரி அடித்துக்கொண்டு போகிறானே என்று கூட்டத்தில் சிலருக்குக் கோபம்கூட வந்தது.

கௌதமருக்கு அகலிகை—கொஞ்சமும் பொருத்தமற்றதுதான். ஆனால் போட்டியின் முடிவை மாற்றமுடியாதே! போட்டியில் கௌதமமுனிவர் வெற்றிபெற்றார், பொன்னிறமேனியள் அவருக்குத் தரப்பட்டாள் வெற்றிப்பரிசாக. விருந்து முடிவில் கௌதமர் தன் காட்டுவாசத்துக்குப் புறப்பட்டார், அகலிகையை அழைத்துக்கொண்டு. கூட்டம் கலைந்து சென்றது. இந்திரன் மட்டும் தனியாக நின்றுகொண்டிருந்தான். சோகம் நிறைந்த கண்களுடன், தாபம் நிறைந்த பார்வையுடன், அகலிகை செல்லும் திக்கை நோக்கி.

பின்பு, காட்டு வாசத்தில், கௌதமர் ஆசிரமத்தில், நடந்த கதை எல்லோருக்கும் தெரிந்ததே! அகலிகையின்மேல் வைத்த மோகத்தை அடக்கமுடியாத இந்திரன், கௌதமர் ஆசிரமத்தைவிட்டு வெளியேறிய பின், அவரைப்போல வேடந்தாங்கி அகலிகையை அடைந்தான். அந்த விபரீதத்தைக்கண்டு கௌதமர், இந்திரன் உடலெங்கும் பெண்குறி மயமாகவும், அகலிகையை கல்லாகவும் சபித்தார்.

பெண்களில் மிகச்சிறந்தவர்களாக ஐந்துபேர்களைப் புராணம் விவரிக்கிறது. அவர்கள் அகலிகை, அருந்

..., சீதை, தாரை, திரௌபதி. இந்தப் பஞ்ச கன்னியர்களில் ஒவ்வொருவருடைய கதையும் வேடிக்கையானது. எப்படி தாரையும், திரௌபதியும், அகலிகையும் பெண்கள் குலத்திற் சிறந்தவர்களாகப் போற்றப்பட்டார்கள் என்று புரிவதில்லை. அகலிகையின் கதையில், அவள் கற்பிழந்ததற்கு இந்திரனின் வஞ்சமே பெரிதாகக் காட்டப்படுகிறது. இந்திரன் கோழிபோலக் கூவியதால் கௌதமர் செல்லவும், பின் முனிவர்போலச் சென்றதால் தன் கணவன் என நினைத்து அகலிகை மருவினுள் என்றும் அகலிகைமீது மாசுபடியாதவாறு, பத்தினியாக—பஞ்சகன்னியரில் ஒருத்தியாக ஆக்கப்பட்டிருக்கிறது.

கம்பராமாயணத்தில், அகலிகையைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது கம்பர்கூட, "நெஞ்சினுற் பிழைப்பிலாள்" என்று குறிப்பிடுகிறுர். அதாவது, நெஞ்சினால் அகலிகை பிழை செய்யவில்லை. இந்திரன், அவளுடைய கணவன்போல மாற்றுருவில் வந்ததால், அவன் அணையை ஏற்றுக்கொண்டாள் ; எனவே அவள் பிழையற்றவள் என்று கூறுகிறுர். இது கம்பராமாயணத்தில் பாலகாண்டம் அகலிகைப்படலத்தில் ..-ம் பாடலில் வருகிறது. காட்டிலே நடந்துவரும்பொழுது சக்ரவர்த்தித் திருக்குமாரனும் இராமபிரானின் திருவடிபட்டுக், கல்லாய்க்கிடந்த அகலிகைப் பெண் உருவமடைந்து எழுந்துநின்று வணங்குகிறுள். அகலிகையைக் கல்லாகச் சபித்துவிட்டு, இமயமலைச்சாரலில் தவஞ்செய்துகொண்டிருந்த கௌதமருக்கு ஞானக்கண்ணினுல், அகலிகை சாப விமோசனமடைந்தது தெரிந்ததாம். உடனே அவர் புறப்பட்டு, அகலிகை இராமபிரானை வணங்கி நிற்கும் இடம் வந்து சேர்ந்தார். அப்பொழுது விசுவாமித்திரர் கௌதம முனிவரைப் பார்த்து "இவள் நெஞ்சினுல் குற்றமற்றவள் ஆதலால் ஏற்றுக்கொள் !" என்று கூறுகிறுர்.

கம்பராமாயணத்தில் உள்ள பாடலாவது :

அஞ்சன வண்ணத் தான்றன்
    அடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோ லிடையாள் முன்னை
    வண்ணத்தா ளாகி நின்றுள்
நெஞ்சினுற் பிழைப்பி லாளை
    நீயழைத் திடுக வென்னக்
கஞ்சமா முனிவ னன்ன
    முனிவனுங் கருத்துட் கொண்டான் "

பாட்டின் பொருளாவது " மைபோன்ற நிறமுடைய இராமனது பாததுளி பட்டவுடனே, வஞ்சிக்கொடிபோன்ற இடையினையுடைய அகலிகை, முன்னை வடிவத்தை உடையவளாகி நின்றுள். மனத்தினுல் குற்றம் இல்லாத இவளை, நீ அழைத்துச் சேர்த்துக்கொள்வாயாக !" என்று விசுவாமித்திரர் சொல்ல, பிரமதேவனையொத்த சிறப்பினையுமுடைய கௌதம முனிவரும், அதை மனதில் ஏற்றுக்கொண்டார் " என்பதாகும்.

இந்தப் பாட்டில், அகலிகை "நெஞ்சினுல் பிழையற்றவள்" என்பது வலியுறுத்தப்படுகிறது.

மற்றொன்று பாருங்கள், கம்பநாட்டார் தனது "ரசனை"யைக் கலந்திடும் திறத்தை! பாட்டும் வரும் நிலை, கல்லாகச் சபிக்கப்பட்ட பெண் மீண்டும் உயிர் பெற்றெழுதல், எதிரே முனிபுங்கவரான அவளுடைய கணவர் கௌதமர், பக்கத்திலே பாலப்பருவமுள்ள ராமலட்சுமணர்கள், மனைவியை மீண்டும் ஏற்றுக்கொள்ளும்படி கௌதமரை வேண்டிக்கொள்பவர் விசுவாமித்திரர். அதைக் கூறவந்த பாட்டில், எவ்வளவு பொறுமையும், உயர்வும் இருக்கவேண்டும். அகலிகை "கற்பு வழுவாதவள்!" "இல்லறத்துக்கு ஏற்ற குணவதி !" என்று ஏத்திக்கூறப்படவேண்டிய இடம். இந்தக் கட்டத்திலும் கம்பரின் காமரசனை போகவில்லை. தொழுது நிற்கும் அகலிகையைப் பற்றிக் கூறும்பொழுது "வஞ்சிபோல் இடையாள்!" என்கிறுர். அதாவது "வஞ்சிக்கொடிபோன்ற இடையை உடையவள் !" என்று குறிப்பிடுகிறுர். அகலிகையின் உள்ளத்தூய்மையைக் கூறவேண்டிய இடத்தில், இடையைப்பற்றி என் வர்ணனை வருகிறது ? வஞ்சிக்கொடிபோன்ற மங்கை என்றுலாவது, ஏதோ பொதுப்படையாகச் சொல்லுகிறுர் கவி என்று இருந்துவிடலாம். கம்பரோ, அகலிகையின் இடை பற்றி அழகுவமை காண்கிறுர். "வஞ்சிக்கொடிபோன்று மெல்லிய இடையினையுடைய அகலிகை !" என்று கற்பின் மேன்மைபற்றிச் சொல்ல நினைக்கும் இடத்தில் இடையின் மென்மைபற்றிக் கம்பரின் கவனம் என் செல்லுகிறது ? காதற்கட்டமல்ல ! காமச்சேட்டையுமல்ல விவரிக்கப்போகும் சம்பவம் ! "குற்றமற்றவள்!" என்று சொல்லப்படவேண்டிய இடத்தில் இடையழகும், மார்பழகும்பற்றி விளக்கம் தருவது சரியா? பொருந்துமா? பெண்ணென்று வந்துவிட்டால் போதும், அயோத்தி அரசிளங்குமரியாயினும், ஆரண்யத்திலே எழுந்த அகலிகையாயினும், யாராயிருந்தாலும்சரி, அவளுடைய அங்க அழகு ஏதாவது சொல்லாவிட்டால் கம்பர் திருப்தியடைவதில்லை.

அது நிற்க, மேலே குறிப்பிடப்பட்ட பாட்டில், "நெஞ்சினுல் பிழைப்பிலாள் !" என்று அகலிகை பற்றிக் கூறப்படுகிறது. அதற்கு அடுத்தபாட்டில், இராமன் கௌதம முனிவரை வணங்கி அகலிகையை அவர் வசத்தில் சேர்ப்பிக்கிறுன். அங்கு அகலிகை பற்றிச் சொல்லும்பொழுது " மாசறு கற்பின் மிக்க அணங்கு !" என்று கம்பர் கூறுகிறுர். இந்த இரு பாட்டுகள், பாலகாண்டம் அகலிகைப் படலத்தில் 85, 86-ம் பாட்டுகளாகும். இந்தப் பாட்டுகளை மட்டும்

படித்தால், அகலிகைமீது குற்றமில்லை, இந்திரன் செய்த வஞ்சத்தால் ஏமாற்றப்பட்டாள்! என்றுதான் தோன்றும். ஆனால் அகலிகைப்படலத்தில், இதற்கு முன் வரும் பாட்டு ஒன்றை—76-ம் பாடலைக் கவனிக்கலாம்.

இதில், கல்லை மிதிக்க, அதிலிருந்து கன்னியொருத்தி எழுந்து வணங்கிநிற்பதைப் பற்றி இராமன் ஆச்சரியப்படுகிறான். விசுவாமித்திரர், அகலிகை கல்லான கதையைக்கூறுகிறார். முதல் இரண்டு பாடல்களில், கௌதமர் இல்லாத சமயத்து இந்திரன் வருவதும், அகலிகையை அடையவேண்டி கௌதமர்போல உருவங்கொண்டு இந்திரன் அகலிகையை நாடிச்செல்வதும் கூறப்பட்டுள்ளன. மூன்றாவது பாடலில், மாறு வேடந்தரித்த இந்திரன்—அவனை மருவிடும் அகலிகை இவர்களின் நிலையைக் கம்பர் விவரிக்கிறார்.

"புக்கவ ளோடுங் காமப்
புதுமண மதுவின் தேறல்
ஒக்கவுண் டிருந்த லோடும்
உணர்ந்தன ளுணர்ந்த பின்னும்
தக்கதன் றென்ன வோராள்
தாழ்ந்தன ளிளிப்பத் தாழா
முக்கண னனைய வாற்றல்
முனிவனும் முடுகி வந்தான்"

பதவுரை : புக்கவளோடும் - (குடிசையில் வேற்றுருக்கொண்டு) புகுந்த இந்திரனோடு ;
காமப் புது மணம் மதுவின் தேறல் - காமமாகிய புதிய மணங்கமழும் கள்ளின் இன்பத்தை ;
ஒக்க உண்டிருத்தலோடும் — (அகலிகை) சமமாக அனுபவித்துக்கொண்டிருக்கையில் ;
உணர்ந்தனள்—(தன்னைப் புணர்பவன் கணவனல்லன் இந்திரன் என்று அவள்) அறிந்தாள்;
உணர்ந்தபின்னும் — அறிந்தபின்னும் ;
தக்கது அன்று என்ன ஓராள் - (இச்செயல்) தகுதியானது அல்ல என்று ஆலோசித்து அதனை விலக்காதவளாய் ;
தாழ்ந்தனள் — (இக்கொடுஞ்செயலால்) தாழ்ந்துபோன அகலிகை ;
அளிப்ப - (இன்பத்தை இந்திரனுக்கு மேலும்) கொடுக்க ;
தாழா முக்கணன் அனைய ஆற்றல் முனிவனும் — (அச்சமயத்தில்) குறைவில்லாத மூன்று கண்களையுடைய சிவபெருமானை ஒத்த வலிவுடைய கௌதமமுனி வரும் ;
முடுகி வந்தான் - விரைவாய் வந்துசேர்ந்தான்.

இந்தப் பாடலில் கூறப்படும் கருத்துக்கும், இதற்குப்பின் பத்துப்பாடல்கள் கழித்து சொல்லப்படுவதற்கும் ஏதாவது ஒற்றுமை இருக்கிறதா? 85, 86 பா களில் "நெஞ்சினால் பிழைப்பறியாதவள்" "ம கற்பினாள்" என்று சொல்லுகிறவர், 76-வது ப லில். "காம இன்பத்தைச், சமமாக அள்ளிப்பருகி தன்னோடு இருந்தவன் கணவனல்ல, இந்திரன் எ தெரிந்தபின்னும்!" என்று கூறுகிறார். அது அவளடைந்த இன்பத்தை, எவ்வளவு ரசனையே கம்பர் கூறுகிறார்! "காமப் புதுமண மதுவின் தே அவள் இதுவரை அறியாத, புதுமையான, காமமா மணம்வீசும் மது—தேறல் என்றால் தேன் என் பொருள் இனிய சுவையும் இன்பவெறியும் தரவ தேனால் ஆன மது அந்தக் காமத்தேனை, பரு கொண்டே இருந்தாள் என்று இருக்கிறது! அவ கிடைத்த இன்பம் புதுமையாக தேன் இனிமை இருந்ததும், தன்னுடனிருப்பது கணவர் கௌ ரல்ல, என்று தெரிந்துவிட்டது. அவள் பத்தினி யிற்றே—பஞ்ச கன்னியரில் ஒருத்தியாயிற் தன்னுடனிருப்பது மாற்றான் என்று தெரிந்த "தூ!" என்று உதறித்தள்ளினாளா? "பிடி சாபம் என்று சபித்தாளா? ஒன்றுமே முடியாவிட்டா "ஏ! ஆபத்சகாயா! அனாதரட்சகா!" என்றாவ கூவியிருக்கலாமே! கிடையாது. இந்திரன் என் தெரிந்தபின்னும், அவனைவிட்டு நீங்கவில்லை; மாற இன்பத்தை மேலும் 'அளித்தாள்' என்று கம் கூறுகிறார்,

கம்ப இராமாயணம், பாலகாண்டம், அகலிகை படலம். அந்த ஒரு படலத்திற்குள் 76-வது பாட்டி "தக்கதன்று என்ன ஓராள், தாழ்ந்தனள்" என்று பத்து பாட்டுகள் தள்ளி 86-ம் பாட்டில் "மாசறு க பின்மிக்க அணங்கே!" என்று கம்பரால் எப்ப எழுத முடிந்தது?

கம்பனின் பாட்டுகள் நிற்க. அகலிகை இந்திர விரும்பியே ஏற்றுக்கொண்டாள் என்று கதை விளக் கிறது. முக்காலமுணர்ந்த முனிவர், ஞானக்கண் பெற்ற தவசிரேஷ்டர் என்றெல்லாம் கூறப்படு கௌதமரால், தனது வீட்டில் நடக்கும் விபரீதத்தை தெரிந்துகொள்ள முடியவில்லை. கங்கைக்கரையை அடைந்தபின்தான், காலை இன்னும் உதயமாகவில்லை என்ற ஞானோதயம் கௌதமருக்கு உண்டானது பின் "ஞானதிருஷ்டியை" உபயோகப்படுத்தினா குடிசையில், புல் மெத்தையில், தன்னுருவில் இந்திர னும், தனது பாரியை அகலிகையும் "காமப் புதுமண மதுவை" 'ஒத்தமனதுடன்' சுவைத்துக்கொண்டிருப் பது தெரிந்தது. முற்றும்துறந்த முனிவர்! இருந் தாலும் தனது மனைவி மற்றொருவனுடன் மஞ்சத்தில் கொஞ்சிக்கொண்டிருக்கிறாள் என்றால், கோபம் வரா மலாபோகும். உடனே பரமசிவனைப்போல கோபக் கனல் தெறிக்க, பர்ணசாலைக்கு வந்தார்; சாபமிட் டார்: இந்திரன் "ஆயிரங்கண்ணோன்" ஆனான், அகலிகை கல்லாக சமைந்தாள். பின் தசரத குமாரன்

லடிபட்டு. கல் பெண்ணானது ; கெளதமர் வந்து ழைத்துப்போனார்.

இதுதான் கெளதமருடைய வரலாற்றில் நடந்த "உன்னத" சம்பவம். இதற்குப்பின் அகலிகை ஞ்சகன்னியரில் ஒருத்தியானாள். கெளதமர் சப்தரி களில் ஒருவரானார்.

பரத்துவாசர்

புராணத்தில் பரத்துவாசரைப்பற்றிச் சொல்லும் பாழுது, " இவர் ஒரு ரிஷி சிரேஷ்டர். தந்தை தத்தியன், தாய் மமதை, பிரகஸ்பதியால் பிறந்த ர்..." என்றிருக்கிறது. தந்தை உதத்தியன், னால் பிரகஸ்பதியால் பிறந்தவர் !

பிரகஸ்பதியின் கதையில், அவர் தமது தம்பி னைவியை. வலிதிற்புணர்ந்து. ஒரு பிள்ளையை பெற் றடுத்தார் என்று சொல்லப்பட்டதல்லவா. ('மன்றம்' -வது இதழில்) அந்தப் பிள்ளைதான் பரத்துவாசர்.

பரத்துவாசருக்கு ஏழு பிள்ளைகள் இருந்தனராம். வர்கள் இமயமலையில் தவஞ்செய்துகொண்டிருந்தன ாம். தவக்கோலத்தில். அவர்கள் செய்த தீச்செய்கை ள் கொஞ்சநஞ்சமல்லவாம். கண்டபெண்களை பப்பிடித்து இழுத்தல், காட்டு வழி வருபவர்களை றித்து அவர்களுடைய பொருள்களைக் களவாடுதல் பான்றவைகளில் பரத்துவாசரின் குமாரர்கள் ஈடு பட்டிருந்தனர். ஆதலால் யோகம் கைகூடாது. ந்தப் பிறவி யொழிந்து. அடுத்த பிறப்பில். கெளசி ன் என்பவருக்குக் குருவாய்ப் பிறந்தனர். பூர்வ ஜன்மவாசனை அவர்களுக்குப் போகவில்லை போலும் ! ருசமயம் கார்க்கமுனிவர் என்பவர், ஒரு பசுவை இவர்களிடம் கொடுத்து மேய்த்துவரச் சொன்னாராம். காட்டிற்குப் பசுவை அழைத்துச் சென்றதும். அவர் ளுக்கு மாட்டு மாமிசம் தின்னவேண்டுமென்ற ஆசை உண்டானது. உடன் ஏழுபேரும்சேர்ந்து தாங்கள் ஓட்டிவந்த பசுவையும், அதனுடைய கன்றை யும் கொன்று. அவற்றின் மாமிசத்தைத் தின்றுவிட் டனர். ஆனால் தின்பதற்கு முன், பிதுர்க்களுக்கு சிறிது மாமிசத்தைச் சிரார்த்தம் செய்துவிட்டுத் தின் றனர். பின் பசுவினது சொந்தக்காரர் பசுவைக் கேட்டபொழுது. புலியடித்துவிட்டதெனப் பொய் புகன்றனர். இதனால் மறுபடியும் ஏழு குமாரர்களும் இழிபிறப்படைந்து. கடைசியில் ஒரு புண்ணிய காரியத்தால் தேவபதவியடைந்தனர் 'என்று புராணக் கதை கூறுகிறது. அவர்கள் செய்த ஒரு புண்ணிய காரியம். தாங்கள் திருடிவந்த கன்றையும் பசுவையும் கொன்று. அதன் மாமிசத்தைத தின்பதற்குமுன், பிதுர்க்களுக்குச் சிரார்த்தம் செய்ததுதான் ! களவாடி னலும், பசுவையும் கன்றையும் அநியாயமாகக் கொன்றாலும், கடைசியில் ஒருபங்கு சிரார்த்தம் செய் ததால், உயர்கதி அவர்களுக்குக் கிடைத்தது ! சிரார்த் தத்தின் பலன், துன்மார்க்கர்களாக இருந்த பரத்து வாச குமாரர்களைக் காப்பாற்றியதாம் ! இந்தக் கதை சிவகாமபுராணத்திலும், கம்ப இராமாயணத்திலும் இருக்கிறது. பிற்காலத்தில், பசுவதை மாபெரும் பாவம் என்று கருதப்பட்டபோதிலும். ரிஷிசிரேஷ் டர்கள் பசுவின் மாமிசத்தை விரும்பித் தின்றார்கள் என்பது தெரிகிறது.

பரத்துவாசர் தண்டகாரண்யத்தில் இருந்தவர். இலங்கை சென்று மீண்ட இராமபிரான் ஒருநாள் இவர் வீட்டில் தங்கிச்சென்றாராம். இவர் இருக்கு வேத ஆறுவதுகாண்டத்துப் பாடல்களைச் செய்தவர்.

விசுவாமித்திரர்

விசுவாமித்திரர் முதலில் அரசராக இருந்தவர், ஒருசமயம் வசிட்டருடைய ஆசிரமத்துக்கு, தனது பரிவாரங்களுடன் வேட்டையாடிவரும்பொழுது தங்கினர். வசிட்டர் தன்னிடமிருந்த காமதேனுவின் உதவியால் அரசனுடைய சேனைக்குப் பெரிய விருந்து தந்தார். காமதேனுவின் பெருமையைக் கண்ட விசுவாமித்திரர், அதைக் கொடுக்கும்படி கேட்டார். வசிட்டர் விரும்பவில்லை. ஆதலால் வலுவில் அதனைக் கவர்ந்துபோக முயன்றார். அவரும் அவருடைய சேனையும் எவ்வளவு முயன்றும் காமதேனுவைக் கைப்பற்ற முடியவில்லை. தன்னுடைய உடலில் இருந்து பல சேனா வீரர்களை உதிர்த்து, விசுவாமித் திரர் படைகளை அழித்தது. விசுவாமித்திரருடைய குமாரர்களில் சிலர் வசிட்டரை எதிர்க்கத்தொடங் கினர். வசிட்டர் தன் தவவலிமையால். அவர்களைப் பார்த்தபொழுதே எரிந்துவிட்டார். விசுவாமித்திர ரும். மற்றவர்களும் வசிட்டர்மீது அம்புகளைத் தொடுத்தனர் ! வசிட்டர் தன் கோதண்டத்தால் அவற் றைத் தடுத்துவிட்டார். இதனால். தவத்திற்கு மிகுந்த பலமில்லையெனக் கண்டு, விசுவாமித்திரர் அரசபதவி யைத் துறந்து, கடுமையாகத் தவஞ்செய்து, ராஜரிஷி யானார். வசிட்டர் வாயால் "ரிஷிசிரேஷ்டர்" என்று அழைக்கப்பட்டார்.

விசுவாமித்திரன் முதலில் அரசனாகயிருந்து, பின் தவசியாக மாறியதற்கு மற்றொரு புராணக்கதையும் இருக்கிறது. காதிராசன் என்ற அரசனுக்கு வெகு காலம் புத்திரப்பேறு இல்லாமலிருந்தது. காதிராசன் மனைவிக்கு ஒரு தமக்கை இருந்தாள். அவள் பிருகு என்ற முனிவருக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். அவ ளுக்கும் மகப்பேறு இல்லை. இருவரும் பிருகு முனி வரை வணங்கி. தங்களுக்கு புத்திரப்பேறு அளிக்கு மாறு வேண்டினார்கள். அவர் ஒரு அரசமரத்தையும், பலாசமரத்தையும் காட்டி. மங்கல தினத்தில் இரு வரும் அம்மரங்களை வலம்வந்து, கட்டித் தழுவிக் கொண்டால், புத்திரப்பேறு உண்டாகும் என்று

சொன்னார். அவர் அரசனுடைய மனைவிக்கு அரசமரத்தையும், தனது மனைவிக்குப் பலாசமரத்தையும் குறிப்பித்திருந்தார். பெண்கள் இருவரும் ரிஷி கூறிய வகை செய்யப்போகையில், மறதியால் அரசபத்தினி பலாசமரத்தையும், ரிஷி பத்தினி அரசமரத்தையும் கட்டித் தழுவிக்கொண்டனர். இதனால் அரசபத்தினிக்குப் பிறந்த குமாரன் ரிஷி ஆகவும், ரிஷி பத்தினிக்குப் பிறந்தவன் அரசனாகவும் ஏற்பட்டுவிட்டது. இவ்வாறு, பலாசமரத்தை காதிராசன் மனைவி அணைந்து பெற்றெடுத்த மகனே கௌசிகன்—பின் விசுவாமித்திரனாக ஆனவர்.

விசுவாமித்திரர் தவஞ்செய்துகொண்டிருக்கும் பொழுது வந்த இடையூறுகள் பல. ஒருசமயம் திலோத்தமை இவரது தவத்தைக் கெடுத்தாள்; மற்றொரு சமயம் மேனகை அவரை மயக்கினாள். இருந்தாலும் நான்கு திக்கிலும் சுற்றி, தவஞ்செய்து, நட்சத்திரபதவியும். பிரம்மரிஷியென்ற பட்டமும் பெற்றார். இவர் திரிசங்குவை சுவர்க்கத்திற்கு அனுப்ப, அங்கிருப்பவர்கள் கீழே தள்ள, இரண்டுமில்லாமல் திரிசங்கு அந்தரத்தில் திண்டாடினான். இதைக்கண்டு, விசுவாமித்திரர் வேறு சுவர்க்கலோகத்தை சிருட்டிக்கத்தொடங்கினாராம். உடனே பிரமதேவர் தோன்றி, இவருடைய வேண்டுகோளை நிறைவேற்றி, புதிதாக ஒரு போட்டி சுவர்க்கம் ஏற்படுவதைத் தடுத்தாராம்.

சப்தரிஷிகள் என்பவர். ரிஷிகளுக்குள் சிரேஷ்டர்கள்; ஆனால் அவர்களுக்குள்ளிருந்த கோபதாபங்கள். சண்டை சச்சரவுகள், உலகத்தில் காட்டுமிராண்டி காலத்துப் பகைவர்களிடம்கூட இருந்திருக்காது. வசிட்டருக்கும். விசுவாமித்திரருக்கும் நடந்த சண்டைகள் ஏராளம்.

வசிட்டர் ஒருமுறை விசுவாமித்திரரின் குமாரர் பலரைக் கொன்றுவிட்டார். வேறொரு சமயம். விசுவாமித்திரர் வசிட்டரின் புத்திரர்களைக் காட்டுமிராண்டிகளாகப் போகும்படி சபித்துவிட்டார்.

அரிச்சந்திரன் பொய் சொல்லுவானா? மாட்டானா? என்ற சிறிய வாக்குவாதத்தில், இரு பெரிய ரிஷிகளும் ஈடுபட்டு, அவனுக்குச் சொல்லமுடியாத தொந்தரவுகளையும் கொடுத்தனர். இவர்கள் சண்டைபோட்டுக்கொள்வதால், இவர்களுடன் மட்டுமல்ல, ஊராரையும் பாதிப்பதாக இருந்தது. அரிச்சந்திரனைப் படாதபாடு படுத்தியபின், இருவருடைய சண்டையும் குறையவில்லை. அதன் முடிவில், வசிட்டர் விசுவாமித்திரரைக் கொக்காகப் போகுமாறு சாபமிட்டார்; அதற்குப் பதிலாக, விசுவாமித்திரர் வசிட்டரை ஆமையாகப் போகும்படி சபித்தார். இரண்டு ரிஷி சிரேஷ்டர்களும். கொக்காகவும், ஆமையாகவும் கொஞ்சகாலம் உலவிக்கொண்டிருந்தனர்.

விசுவாமித்திரர் ஒருசமயம் பட்டினியால் மிக வாடினாராம். மாமுனிவர், எதையும் பெறும் தவவலிமை படைத்தவர். நினைத்தால் ஒரு புதிய சுவர்க்க உலகத்தையே உண்டாக்கவல்ல ரிஷிசிரேஷ்டர், அத்தனைவர் பசிக்கொடுமைக்கு ஆளாகியிருப்பாரா? என்று கேட்கத்தோன்றும். முற்றும் துறந்த முனிவர்களுக்கு தவஞ்செய்யும்பொழுது பசிதாகமே தெரியாது. உட்கார்ந்திருப்பவர்மீது எறும்புகள் புற்று கட்டுமளவு அசையாது இருப்பார்கள் என்று படித்திருக்கிறோம். ஆனால் எவ்வாறோ விசுவாமித்திரருக்குத் தாங்கமுடியாத பசி உண்டாயிற்றாம். அவர் நின்றுகொண்டிருந்த இடமோ புதர்கள் நிறைந்த காடு. கனிவகைகளோ கந்த மூலாதிகளோ எதுவும் கிடைக்கவில்லை. பரமபதத்தைத் தேடி யோக நிட்டை செய்யவேண்டிய செய்த முனிபுங்கவர், பசியைத் தீர்த்துக்கொள்ள வேண்டி. ஒரு கவளம் அன்னத்துக்காக அலைந்தார். எங்கும் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு வேட்டுவன் எதிர்ப்பட்டான். அவன் கையில் ஒரு மூட்டை இருந்தது.

“ அடா !” என்றார் முனிவர்,

“ என், ஸ்வாமி ” என்றான் வேடன்.

“ கையிலிருப்பது யாதோ !” விசுவாமித்திரரின் குரலில் கெஞ்சுதல் இருந்தது. அவன் புலையன்—சண்டாளத்துவம் அடைந்தவன். அவன் பார்க்க இந்தத் தவசி தண்ணீர் சாப்பிடுவதும் தவறு. ஆனால் இப்பொழுது இருக்கும் பசியில். அவன் வைத்திருக்கும் மூட்டையில் உணவு இருந்தால். வாங்கிச் சாப்பிட்டுவிடலாம் என்ற எண்ணம். புலையன் மூட்டையை அவிழ்த்தான். பார்க்கக் கண் கூசியது ஒரு நாய். தலையற்று உடல் கண்டதுண்டமாக்கப்பட்டுக் கிடந்தது!

“ புலி அடித்துப் போட்டுவிட்டது. தோலுக்காக எடுத்துப் போகிறேன் !” என்று புலையன் விளக்கந்தான். புலி அந்த நாயை அடித்துவிட்டு. இரத்தத்தைக் குடித்திருக்கிறது. பின் சிறிது பதம் பார்த்தது. போட்டுவிட்டுப் போய்விட்டது. அதைத் தோலுக்காக புலையன் எடுத்துப்போகிறான்.

விசுவாமித்திரருக்குப் பசி வயிற்றைக் கிண்டிக்கொண்டிருந்தது. புலி நாயை அடித்தது, அதன் மாமிசத்தைத் தின்னலாம் என்றுதானே! நாமும் என் நாயின் மாமிசத்தை......! விசுவாமித்திரருக்கு அந்த விபரீத யோசனை வந்தது.

“ புலையனே ! சற்று எட்டிப்போ !” என்று முனிவர் உத்தரவிட்டார். புலையன் தூர நகர்ந்தான். ரிஷி சிரேஷ்டர். புலி கடித்துப்போட்ட மாமிச மூட்டையைக் கிளறினார். நாயின் கால் கிடைத்தது, சற்று மாமிசத்துடன். அதை எடுத்தார், முகர்ந்தார், பின் சுவைக்க ஆரம்பித்துவிட்டார்! முனிபுங்கவருக்கு நாயின் முழங்கால் மாமிசம் விருந்தாயிற்று !

விசுவாமித்திரரைப்பற்றிய இந்தக் கதை மனு புராணத்தில் இருக்கிறது.

(தொடரும்)

வானிலை முன்னறிவிப்பு

இரண்டாண்டுகளுக்கு முன்பு தென்னாட்டில் டும் புயலொன்று வீசி நெற்களஞ்சியமாகிய தஞ்சை மாவட்டத்திலும் திருச்சி மாவட்டத்திலும் பெருமளவில் அழிவு ஏற்படுத்தியதை நாம் அறிவோம். இத்தனைக்கும் அப்படிப்பட்டதொரு புயல் வீசப்போவது குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சிக்கூடத்தார் ஒரு நாள் முன்பே அறிக்கை வெளியிட்டனர். வசதிகள் குறைந்த காரணத்தினால் அந்த அறிவிப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. என்றாலும் விமான, கப்பற் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டன. புகைவண்டிகள் கவனத்துடன் ஓட்டிச்செல்லப்பட்டன.

போக்குவரத்து சாதனங்களும் விஞ்ஞான வசதிகளும் பெருகிநிற்கும் இன்றைய நாளிலையே புயல்களின் அழிவை முழுவதும் தடுக்கமுடியவில்லையென்றால், புயல்கள் பூவுலகிற்கு அனுப்பப்படும் கடவுளின் கணைகள் என்று கருதி வாழ்ந்த அன்றைய நாட்களில் அவை ஏற்படுத்திய அழிவு அதிகமாகத்தான் இருந்திருக்கும்.

ஒவ்வொரு முறையும், புயல் வீசும்பொழுதும், மழை பெய்யும்பொழுதும் மனிதன் சில உண்மைகளைக் கண்டான். மாறாத சில புயற் குறிகளையும் மழைக்குறிகளையும் ஒவ்வொரு முறையும் கண்டுவந்தனர். என்றாலும் மழையையும் புயலையும் முன்கூட்டியே அறிவிக்கும் திறன் சென்ற நூற்றாண்டின் இறுதியில்தான் ஏற்பட்டது.

சென்ற நூற்றாண்டில் அமெரிக்காவில் அடிக்கடி புயல்களினால் அழிவுகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. எல்லோரும் வானிலையைப் பற்றிப் பேசினார்களே தவிர, நேரத்தைச் சிந்தனைக்குச் செலவிடவில்லை. வான நிலைகளைப் பற்றி, ஆராய்ந்து, உண்மை கண்டு, பெரும் வெற்றிபெற்றவர் லாப்காம் என்ற அறிஞராவார். தாம் கண்டுபிடித்த உண்மைகள், உலகம் பயனடைய உபயோகப்படுத்தப்பட்டதைத் தனது வாழ்நாளிலேயே கண்டார். அவருடைய திட்டங்களும், வழிகளும் அமெரிக்க அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, முக்கியப் பயிர்களிலிருந்து லட்சக் கணக்கான டாலர்களை சேகரிக்க உழவர்களுக்கு உதவிற்று, எண்ணற்ற கப்பலோட்டிகளைக் காப்பாற்றியது.

செடியின நூல் அறிஞராகவும், இயற்கை நூல் மாணவராகவும் திகழ்ந்த லாப்காம் வான் நிலைபற்றி அறிவதில் மிகுந்த விருப்பங்கொண்டிருந்தார். தமது பதினாறாவது வயதில் நில உட்கூற்றியல் பற்றிய நூல் ஒன்று வெளியிட்டார். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, ஓகியோ கால்வாயின் பொறியியல் அதிகாரிக்கு உதவியாக வேலைக்குச் சென்றார்.

பொருள் சேர்ப்பதில் விருப்பங்கொள்ளாத லாப்காம், 1836-ல் வேலையை உதறிவிட்டு வெளியேறினார். ஒரு மாநிலத்தின்மீது ஏற்படும் இயற்கை நிகழ்ச்சிகளை, அறிவியல் அறிஞர் பலர் கவனஞ்செலுத்தாதிருந்த காலத்தில், குறிப்பெடுத்து ஆராய்வதில் பயனுண்டு என்று எண்ணங்கொண்டார். மிச்சிகன் பகுதியிலுள்ள மில்வாக்கி என்றஇடத்தில் தனது ஆராய்ச்சிகளைத் தொடங்கினார். ஒவ்வொரு நாளின் வெப்ப நிலைகள், மழை அளவுகள், காற்றின் வேகம் அது செல்லும் திசை— இவைகளைக் குறித்துக்கொண்டு ஆராய்ந்தார்.

மிச்சிகன் ஏரி நீர் மட்டத்தின் ஏற்ற இறக்கங்களை ஆராய்ந்த முடிவிலிருந்து வானிலையை முன்கூட்டியே அறியக்கூடுமென்பதோடு, தேவையான காலத்திற்குள் அறிந்து, உயிர்களையும் பொருள்களையும் அழிவேதுமின்றிக் காப்பாற்றவும் இயலும் என்பதை மெய்ப்பித்துக்காட்டினார்.

1859-ல் மிச்சிகன் ஏரிப்பகுதியை அழித்த புயலின் பாதையை—முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென்பகுதியான டெக்சாசைத் தாக்கிப், பின் வடக்குநோக்கி நகர்ந்து பின் கிழக்கு நோக்கித் திரும்பி மிச்சிகன் ஏரியை 24 மணி நேரத்தில் அடைந்து, அட்லாண்டிக் மாகடலை இரு நாட்களில் கடந்து மூன்றாவது நாளில் நோவாஸ்கோஷியாவைச் சேரும் என்று—கூடுமான அளவு சரியாக வகுத்ததற்குப்பின், லாப்காம் தன் ஆராய்ச்

சியினைப் பயன் அளிக்கக்கூடியவகையில் செயலாற்ற முன்வந்தார்.

அரசாங்கச் சலுகைத் தனக்குக் கிட்டாது என்றெண்ணிய லாப்காம், தனது ஆராய்ச்சியினைத் தொடர்ந்து நடத்துவதற்கான பொருள் வசதிக்காக டெட்ராய்ட்—மில்வாக்கி இருப்புப்பாதைக் கூட்டுக்குழுவினரிடம் உதவி வேண்டினர். இக்குழுவினர் நீர்வழிப் போக்குவரவுகளைக்கொண்டிருந்ததால் வானிலை ஆராய்ச்சிகளின் பயனை நன்கு தெளிவுபட எடுத்துக் கூறினர். வானிலை ஆராய்ச்சியைவிட, பெரிய வேகமான நீராவிப் படகுகளிடமே நம்பிக்கை கொண்டிருப்பதாகக், கூட்டுக்குழுவினர் லாப்காமுக்கு அறிவித்தனர்.

ஒரு முயற்சி கிடைத்தால் தனது வானிலை அறிவிப்புக்கான திட்டங்கள் நிச்சயம் வெற்றி பெறும் என்று நம்பிய லாப்காம் எதற்கும் கலங்கவில்லை.

வணிகர்களையும், பாங்கிக்காரர்களையும், கப்பற் சொந்தக்காரர்களையும் கண்டுபேசி தனது திட்டங்களின் உண்மையை விளக்கினர், யாரிடமிருந்தும் உதவி கிடைக்கவில்லை. லாப்காமுக்கு பேட்டிகூட தர மறுத்தனர்.

டெட்ராய்ட் ஏரிப் பகுதித் தலைவன் லாப்காமுக்கு மதிப்பு தர மறுத்ததோடு "இந்த வானிலை ஆராய்ச்சித்தாள்களைக் கவனித்துப்பார்க்க எங்களுக்கு நேரமில்லை. தவிரவும், மாறும் நிலையிலுள்ள தட்பவெப்பநிலைகள் எந்த விதிகளுக்கும் அடங்கும்; அதன் துணைகொண்டு கப்பலோட்டிகள் பயன்பெறும் வகையில் வழிகாட்டப்படுவர் என்ற கருத்தை நாங்கள் ஏற்கத் தயாராக இல்லை" என்று கூறி அனுப்பிவிட்டான்.

ஏருத இடங்கள் இல்லை. பார்க்காத பெரிய மனிதர்கள் இல்லை. உதவி எங்கிருந்து கிடைக்கும் என்று ஏங்கிக்கிடந்த லாப்காமுக்கு ஒரு நண்பனின் சந்திப்பு, மிகுந்த வெற்றியைத் தந்தது. ஹால்டன் என்ற அந்த நண்பர் அப்பொழுதுதான் நாட்டு வர்த்தகக் குழுவின் பிரதிநிதியாக அமர்த்தப்பட்டிருந்தார். ஒரு தெருமுனையில் நின்று பல மணிநேரம் பேசி ஹால்டனை தனது வாய்மையால் கவர்ந்து, வானிலை ஆராய்ச்சிக் கூடங்களின் பயனைப் பற்றிப் பெரிதும் விளக்கினர்.

லாப்காமின் ஆர்வத்தைக் கண்டு வியந்த ஹால்டன் தனது வணிகக்குழுவின்மூலம் அரசாங்கத்தை அணுகி உதவி கேட்கச் செய்த முயற்சியில் வெற்றிபெற்ருர்.

1870-ம் ஆண்டில் "வானிலை முன்னறிவிப்பின்" திட்டங்கள் சட்டசபைமுன் வைக்கப்பட்டது. லாப்காம் வீரமுழக்கம் செய்து, அதுவரை 1914 கடல் விபத்துக்களுடன் சுமார் 40 லட்சம் டாலருக்குமேல் ஏற்பட்ட அழிவையும் எடுத்துக்காட்டி வானிலையை முன் கூட்டி அறிவிக்கக்கூடிய வகையில் வானிலை ஆராய்ச்சிக்கூடங்கள் ஏற்படுத்துவதின் அவசியத்தை விளக்கினர். வானிலை ஆராய்ச்சிகளைப்பற்றி குறிப்புத் தாள்கள் எல்லோருக்கும் வழங்கப்பட்டன.

திட்டத்திற்கு காங்கிரசின் அனுமதி கிடைத்தது. 1870-ல் அதற்குத்தனிச்சட்டமு இயற்றப்பட்டது. நாடெங்கும் உள்ள இராணுவ நிலையங்களில் வானிலை ஆராய்ச்சிக் கூடங்கள் ஏற்படுத்த இராணுவ அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. 1870-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ம் நாள் காலை 7-35-க்கு முதல் வானிலை அறிக்கைகள் இக்கூடங்கள் மூலம் படிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டது.

தனது திட்டங்கள் நிறைவேற்றப்பட்டபின் லாப்காம் மற்ற ஆராய்ச்சிகளுக்குத் திரும்பினர். அரசாங்க அதிகாரிகளின் வற்புறுத்தலுக்கிணங்கி, சிகாகோ வானிலை ஆராய்ச்சிக் கூடத்தில் வேலையில் அமர்ந்தார்.

வானிலை அறிக்கைகளை வெளியிடுவதின் முக்கியத்தைச் செய்தித்தாள் ஆசிரியர்கள் உணர்ந்தனர். வானிலை ஆராய்ச்சிக்கூடங்களும் செய்தித்தாள்களை, "தாம் கவனித்தறிந்த வானிலைக் குறிப்புகளை" நாடெங்கும் அறிவிக்கப் பயன்படுத்திக்கொண்டன. இன்று வானிலை அறிக்கையை வெளியிடாத செய்தித்தாள்களே இல்லை. 'வானிலை முன்னறிவிப்பின்' தந்தையான லாப்காம் 1875-ம் ஆண்டு இறந்தார். ஆனல் அவர் வகுத்த முறை அழியவில்லை. தினந்தோறும் செய்தித்தாள்களில் தோன்றும் வானிலை அறிக்கைகள் லாப்காமின் பெருமையை உணர்த்தி நிற்கின்றன.

இலங்கைத் தோழர்களுக்கு

சந்தாதாராகச் சேரவிரும்பும் தோழர்களுக்கு இதழ்கள் வி. பி. மூலம் அனுப்பிவைக்கப்படும். ரூ. 7. பணம்கட்டிப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு ஆண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது.

வறுமையில் கலங்கா வனிதை!

[இரா. செழியன்]

“கேட்டனையா செய்தியை ? நேற்று மாலை, ஆற்றங்கரைச் சோலையில், நங்கை ஊர் பேர் தெரியாத இளைஞனுடன் காணப்பட்டாளாம்!”

“நங்கையா ? இருக்காதே! அடக்கமான பெண் ! அவள் அழகுக்கும், செல்வ நிலைக்கும், அவள் வீட்டு முற்றத்தில் பலர் காத்திருக்கின்றனரே !”

“அந்த இளைஞர்களெல்லாம் அவளுடைய வீட்டை முற்றுகைபோடுகின்றனர் ; ஆனால் அவளுடைய நெஞ்சத்தை முற்றுகைபோட்டு ஒரு ஆணழகன் பிடித்துவிட்டான். வெற்றி விழாவை, இருவரும் சோலையில், மாலையில், யாரும் தெரியாவகையில் கொண்டாடுகின்றனர்.”

“ஊருக்கு மறைந்து, பெற்றோர், உற்றார் அறியாமல் நடக்கும் இந்தக் கள்ளத்தனம்...”

“நமக்கேன் வீண் பேச்சு ! அவள் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள். செல்வத்திற் யாரும் சேயிழை !”

நங்கையைப் பற்றி ஊரில் பேச்சு கிளம்பியது. ஊர்ப் பெண்கள் மொய்த்துப் பேசினர். சிலராக, பலராக, மெதுவாக, பலமாக, இந்த வம்புப் பேச்சு ஊரில் பரவத் தொடங்கியது.

அந்த வம்புப் பேச்சிலும் உண்மை இல்லாமல் இல்லை. அவர்களால் குறிக்கப்படும் பெண், நாள்தோறும் சோலையின் பக்கம் விரைந்து செல்கிறாள் ; அங்கு அவளுக்காகக் காத்திருக்கிறான் கட்டழகன் ஒருவன். வைத்த விழி வாங்காமல் ஒருவரையொருவர் பார்க்கின்றனர். விழிகள் தழுவுகின்றன, மொழிகள் தடுமாறுகின்றன, இதயங்கள் காதலிசையைப் பாடுகின்றன.

காதல் அவள் இதயத்தைத் தொடுகிறது ; காதல் அவள் உடலையும் தொடுகிறது.

ஊரில் வம்பு பரவுகிறது. பெண்கள் அலர் தூற்றுகின்றனர். பழிச்சொற்கள் கேட்டு, பெண்ணை வளர்த்த செவிலித்தாய் செய்வதறியாது திகைக்கிறாள். பெற்றெடுத்த நற்றாய் “நமது குடியின் உயர்வுக்கும், ஒழுக்கத்துக்கும், செல்வ மகளால் சீரழிவு வந்ததே !” என்று நடுங்குகிறாள். தந்தையின் காதிலும் பழிச்சொற்கள் விழுகின்றன; மகளைச் சுற்றிக் கட்டுக்காவல் விதிக்கிறான்.

அவளுடைய இதயத்தைச் சிறையெடுத்து ஒருவன் சென்றுவிட்டான். இப்பொழுது அவளுடைய உடலுக்குச் சிறையிட்டு என்ன பயன் ?

கடைசியாக அந்தப்பெண் ஓடிவிடுகிறாள், கட்டுக்காவலை மீறி, ஊரைவிட்டு, பெற்றோரை உற்றாரை விட்டு, தோழிகளை மறந்து, அணி மணிகளைத் துறந்து, அழகான மாளிகையை விட்டு.

ஊரில் பழிச்சொல் அதிகமானது. பெற்ற தாய் புழுப்போலத் துடித்தாள், பூங்கொடியை நினைத்து. செவிலித்தாய் புலம்பினாள் செல்வியைக் காணாமல். உற்றார்கள் தேடினார்கள்.

ஓடிப்போன காதலர்கள் கடைசியாகக் கண்டுபிடிக்கப்பட்டனர். பெண்ணின் காதலனும் ஒழுக்க சீலனாக உயர்குணத்தானாகக் காணப்பட்டான். ஊரிலிருந்த பெரியோர்கள், பெற்றோரை அணுகி, அறவுரை கூறினார்கள். திருமணம் நடைபெற்றது சிறப்பாக.

இரண்டாவது தடவையாக, பெண் தாய் தந்தையரை விட்டுப் பிரிந்தாள், தன் கணவனுடைய ஊருக்கு. இத்தடவை பெற்றோர்கள் வாழ்த்தி அனுப்பினார்கள். செவிலித்தாய்

உச்சி மோந்தாள், தோழிமார் கேலி மொழி பேசினார்கள். பெண் தன் கணவனுடைய ஊருக்குச் சென்றாள்.

சில திங்கள் கடந்ததும், தன் வளர்ப்புப் பெண்ணைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் செவிலித்தாய்க்கு உண்டாயிற்று. மேலும், செல்வக்குடியில் பிறந்தவள்,சிறுவயதிலிருந்து மிகச் சீராட்டி வளர்க்கப்பட்டவள், கவலையெதுவுமின்றி வாழ்ந்தவள், அவள் இப்பொழுது எப்படித் தனிக்குடித்தனப் பொறுப்பை ஏற்று நடத்துகிறாள் என்பதைப் பார்க்கவும் செவிலித்தாய் ஆசைப்பட்டாள். உடனே பெண்ணைப் பெற்ற தாயிடம் விடைபெற்றுக் கொண்டு, பெண் இருக்குமிடம் வந்தாள்.

மிக ஆவலுடன் வந்த செவிலித்தாய்க்கு, பெண் குடியிருந்த வீட்டைப் பார்த்ததுமே மனம் திடுக்கிட்டது. மிகச் சிறிய வீடு. பெண் பிறந்த வீட்டை நினைக்கும்பொழுது,' அங்கிருந்த சிறு அறைகூட இந்த வீட்டைவிடப் பெரிதாக இருந்தது. யானைகள் கட்டப்பட்ட முற்றம் எங்கே? ஆடுகள்கூட விளையாடமுடியாதவாறு அமைக்கப்பட்ட சிறு குடில் எங்கே? அவள் பிறந்த மாளிகையில் பளிங்கு மேடைகள், பவழம் பதிக்கப்பெற்றத்தூண்கள்,கூடத்தில் சிற்பம், மாடத்தில் ஓவியம் என்று அழகு மிளிர்ந்தது. இந்தக் குடில் ஆடம்பரமற்றுக் கிடந்தது. தனது ஏமாற்றத்தைச் சமாளித்துக்கொண்டு, செவிலித்தாய் வீட்டினுள் சென்றாள்.

அப்பொழுதுதான், வீட்டு வேலைகளை முடித்து, மண் பாண்டங்களைக் கழுவி, ஒரு மண்பாண்டத்தில் சோற்றைப் பிழிந்து வைத்துக்கொண்டிருந்தாள் அவளுடைய வளர்ப்புப் பெண். சாப்பிடும் வேளை அப்பொழுது கடந்துவிட்டது. ஆனால், வீட்டுவேலை அதிகமாக இருந்ததால், வேலைகளை முடித்துவிட்டு, உணவுண்ண உட்கார்ந்திருக்கிறாள் போலும்!

வீட்டு வேலைகளைத் தனியளாகச் செய்துவிட்டு—மண் பாண்டத்தின் முன்—தண்ணீர்ச் சோறுடன்—வேளை தவறி உட்கார்ந்திருக்கும் பெண்ணைப் பார்த்ததும், செவிலித்தாய்க்குக் கண்களில் நீர் கலங்கியது.

அந்தப் பெண் வளர்ந்த நிலைக்கும், இப்பொழுது காணப்படும் நிலைக்கும் எத்துணை வேறுபாடு இருக்கிறது! பிறந்த வீட்டில் எவ்வளவு சீராட்டி வளர்க்கப்பட்டாள்; மாளிகையில் வேலையாட்கள் ஏராளம்; பணிப்பெண்கள் அவள் நினைத்ததைச் செய்யக் காத்துக் கொண்டிருந்தனர். இங்கு அவள் தனிமையில், வீட்டுவேலைகளை எல்லாம் செய்து கொள்கிறாள்.

அவள் வளர்ந்த வீட்டைப் பற்றி, அங்கிருந்த வசதிகளைப்பற்றி, பின் சிறுவயதில் அவளைத் தான் வளர்த்த விதத்தைப் பற்றி செவிலித்தாய் நினைத்துக்கொள்கிறாள். சிறு வயதில் ஒரு பிடி உணவு ஊட்டுவதற்கு பட்ட பாடு அவளுக்கல்லவா தெரியும். உணவூட்ட தானெடுத்துக்கொள்ளும் முயற்சிகள் செவிலித்தாயின் மனக்கண்முன் வருகிறது "தேனும், பாலும் கலந்த உணவைக் குழையப் பிசைந்து, பொற்கிண்ணத்தில் இட்டு, நான் இவளைக் கூப்பிடுவேன், அவள் உண்ண மறுப்பாள்; பின் பூங்கொத்து ஒன்றைக் கையிலெடுத்து, 'நீ சாப்பிடவேண்டும்' என்று அதட்டுவேன். அவள் என்னிடமிருந்து தப்பி, காலில் இருக்கும் பொன் சிலம்பு ஒலிக்கும்படி ஓடுவாள்; வீட்டிலிருக்கும் மற்ற முதிய பெண்கள் அவளைப் பிடிக்க முயலுவார்கள்; அவர்களிடமிருந்து விலகி மாளிகையின் முன் இருக்கும் பூப்பந்தலின் கீழ் நின்று 'நான் உண்ணமாட்டேன், போ!' என்று கண்டிப்பான விடை தருவாள். அந்தச் சிறுமியா இந்தப் பெண் என்ற சந்தேகம் எனக்கு வருகிறது!" என்று செவிலித்தாய் வருந்தினாள்.

தேனும் பாலும் கலந்த அமுதம். அதைப் பொற்கிண்ணத்தில் வைத்து, கெஞ்சிக் கூத்தாடியபொழுது, இவள் உண்ண மறுத்தாள். வேலைக்காரர்களை ஓடவைத்தாள். இப்பொழுது நீரில் கலந்த சோறு-அதை மண்பாண்டத்தில் வைத்து சாப்பிடப்போகிறாள் — அதுவும் வேளை தவறி! செவிலித்தாய்க்குத் துக்கம் தாளமுடியவில்லை, தன் வளர்ப்புப் பெண்ணின் வறுமை நிலையைப் பார்த்ததும்.

திரும்பிய பெண், தன் செவிலித்தாய் நிற்பதைப் பார்த்துவிட்டாள். மண் பாண்டத்தை ஒதுங்க வைத்துவிட்டு, தாவி வந்து கிழவியை அணைத்துக்கொண்டாள். "ஏனம்மா, திடீரென்று, சொல்லிக்கொள்ளாமல்! களைத்து வந்திருக்கிறீர்களே, உட்காருங்கள்! ஊரில் அம்மா, அப்பா எல்லோரும் நலந்தானே!" என்று நலம் பாராட்டினாள்.

செவிலித்தாய் அவள் உச்சி மோந்து "ஒன்றும் குறைவில்லை, கண்ணே! நீ முதலில் சாப்பிடு!" என்றாள்.

"நான் எப்பொழுதோ சாப்பிட்டுவிட்டேன்! இதை வேலை செய்பவளுக்கு எடுத்துவைத்தேன்!" என்று பெண் கூறினாள்.

உச்சி மோந்தாள், தோழிமார் கேலி மொழி பேசினார்கள். பெண் தன் கணவனுடைய ஊருக்குச் சென்றாள்.

சில திங்கள் கடந்ததும், தன் வளர்ப்புப் பெண்ணைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் செவிலித்தாய்க்கு உண்டாயிற்று. மேலும், செல்வக்குடியில் பிறந்தவள், சிறுவயதிலிருந்து மிகச் சீராட்டி வளர்க்கப்பட்டவள், கவலையெதுவுமின்றி வாழ்ந்தவள், அவள் இப்பொழுது எப்படித் தனிக்குடித்தனப் பொறுப்பை ஏற்று நடத்துகிறாள் என்பதைப் பார்க்கவும் செவிலித்தாய் ஆசைப்பட்டாள். உடனே பெண்ணைப் பெற்ற தாயிடம் விடைபெற்றுக் கொண்டு, பெண் இருக்குமிடம் வந்தாள்.

மிக ஆவலுடன் வந்த செவிலித்தாய்க்கு, பெண் குடியிருந்த வீட்டைப் பார்த்ததுமே மனம் திடுக்கிட்டது. மிகச் சிறிய வீடு. பெண் பிறந்த வீட்டை நினைக்கும்பொழுது,' அங்கிருந்த சிறு அறைகூட இந்த வீட்டைவிடப் பெரிதாக இருந்தது. யானைகள் கட்டப்பட்ட முற்றம் எங்கே? ஆடுகள்கூட விளையாடமுடியாதவாறு அமைக்கப்பட்ட சிறு குடில் எங்கே? அவள் பிறந்த மாளிகையில் பளிங்கு மேடைகள், பவழம் பதிக்கப்பெற்றத்தூண்கள், கூடத்தில் சிற்பம், மாடத்தில் ஓவியம் என்று அழகு மிளிர்ந்தது. இந்தக் குடில் ஆடம்பரமற்றுக் கிடந்தது. தனது ஏமாற்றத்தைச் சமாளித்துக்கொண்டு, செவிலித்தாய் வீட்டினுள் சென்றாள்.

அப்பொழுதுதான், வீட்டு வேலைகளை முடித்து, மண் பாண்டங்களைக் கழுவி, ஒரு மண்பாண்டத்தில் சோற்றைப் பிழிந்து வைத்துக்கொண்டிருந்தாள் அவளுடைய வளர்ப்புப் பெண். சாப்பிடும் வேளை அப்பொழுது கடந்துவிட்டது. ஆனால், வீட்டுவேலை அதிகமாக இருந்ததால், வேலைகளை முடித்துவிட்டு, உணவுண்ண உட்கார்ந்திருக்கிறாள் போலும்!

வீட்டு வேலைகளைத் தனியளாகச் செய்து விட்டு—மண் பாண்டத்தின் முன்—தண்ணீர்ச் சோறுடன்—வேளை தவறி உட்கார்ந்திருக்கும் பெண்ணைப் பார்த்ததும், செவிலித்தாய்க்குக் கண்களில் நீர் கலங்கியது.

அந்தப் பெண் வளர்ந்த நிலைக்கும், இப்பொழுது காணப்படும் நிலைக்கும் எத்துணை வேறுபாடு இருக்கிறது! பிறந்த வீட்டில் எவ்வளவு சீராட்டி வளர்க்கப்பட்டாள்; மாளிகையில் வேலையாட்கள் ஏராளம்; பணிப்பெண்கள் அவள் நினைத்ததைச் செய்யக் காத்துக் கொண்டிருந்தனர். இங்கு அவள் தனிமையில், வீட்டுவேலைகளை எல்லாம் செய்து கொள்கிறாள்.

அவள் வளர்ந்த வீட்டைப் பற்றி, அங்கு இருந்த வசதிகளைப்பற்றி, பின் சிறுவயதில் அவளைத் தான் வளர்த்த விதத்தைப் பற்றி செவிலித்தாய் நினைத்துக்கொள்கிறாள். சிறு வயதில் ஒரு பிடி உணவு ஊட்டுவதற்கு பட்ட பாடு அவளுக்கல்லவா தெரியும். உணவூட்ட தானெடுத்துக்கொள்ளும் முயற்சிகள் செவிலித்தாயின் மனக்கண்முன் வருகிறது "தேனும், பாலும் கலந்த உணவைக் குழைய பிசைந்து, பொற்கிண்ணத்தில் இட்டு, நான் இவளைக் கூப்பிடுவேன், அவள் உண்ண மறுப்பாள்; பின் பூங்கொத்து ஒன்றை கையிலெடுத்து, 'நீ சாப்பிடவேண்டும்' என்று அதட்டுவேன். அவள் என்னிடமிருந்து தப்பி, காலில் இருக்கும் பொன் சிலம்பு ஒலிக்கும்படி ஓடுவாள்; வீட்டிலிருக்கும் மற்ற முதிய பெண்கள் அவளைப் பிடிக்க முயலுவார்கள்; அவர்களிடமிருந்து விலகி மாளிகையின் முன் இருக்கும் பூப்பந்தலின் கீழ் நின்று 'நான் உண்ணமாட்டேன், போ!' என்று கண்டிப்பான விடை தருவாள். அந்தச் சிறுமியா இந்தப் பெண் என்ற சந்தேகம் எனக்கு வருகிறது!" என்று செவிலித்தாய் வருந்தினாள்.

தேனும் பாலும் கலந்த அமுதம். அதைப் பொற்கிண்ணத்தில் வைத்து, கெஞ்சிக் கூத்தாடியபொழுது, இவள் உண்ண மறுத்தாள். வேலைக்காரர்களை ஓடவைத்தாள். இப்பொழுது நீரில் கலந்த சோறு-அதை மண்பாண்டத்தில் வைத்து சாப்பிடப்போகிறாள் — அதுவும் வேளை தவறி! செவிலித்தாய்க்குத் துக்கம் தாளமுடியவில்லை, தன் வளர்ப்புப் பெண்ணின் வறுமை நிலையைப் பார்த்ததும்.

திரும்பிய பெண், தன் செவிலித்தாய் நிற்பதைப் பார்த்துவிட்டாள். மண் பாண்டத்தை ஒதுங்க வைத்துவிட்டு, தாவி வந்து கிழவியை அணைத்துக்கொண்டாள். "ஏனம்மா, திடீரென்று, சொல்லிக்கொள்ளாமல்! களைத்து வந்திருக்கிறீர்களே, உட்காருங்கள்! ஊரில் அம்மா, அப்பா எல்லோரும் நலந்தானே!" என்று நலம் பாராட்டினாள்.

செவிலித்தாய் அவள் உச்சி மோந்து "ஒன்றும் குறைவில்லை, கண்ணே! நீ முதலில் சாப்பிடு!" என்றாள்.

"நான் எப்பொழுதோ சாப்பிட்டுவிட்டேன்! இதை வேலை செய்பவளுக்கு எடுத்துவைத்தேன்!" என்று பெண் கூறினாள்.

“ பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொன்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பில் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென்று ஒக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொன்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரிஇ மெலிந்தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவினை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுதுமறுத்து உண்ணுஞ் சிறுமது கையளே.

[பிரசம் - தேன், ஒச்குபு - ஓச்சி, தெண்ணீர் – தெளிந்த ஒளியுடைய, தத்துற்று - பாய்ந்து, பரீஇ - ஓடி, பந்தர் – பந்தல், வறன் உற்றென – வறுமை அடைந்ததென, கொழுஞ் சோறு – உயர்ந்த, செம்மையான உணவு, உள்ளாள் - நினைக்காதவளாய், நுணங்கு - சிறிய, அறல் - மணல், மதுகையள் - வன்மையுடையவள்.]

காதலில் ஈடுபட்ட பெண் எவ்வாறு மாளிகையைவிட்டு மண்குடில் வரவும், தீம்பால் அமுதை மறந்து வேளை தவறி உண்ணும் நீர்ச்சோறை விரும்புவளாக ஆகிருள் என்பது காட்டப்படுகிறது. உண்மைக் காதலுக்காக, அந்தப்பெண் தனது செல்வம், வசதி, சீர், சிறப்பு எல்லாவற்றையும் மறந்துவிடத் தயாராகிருள். செல்வக்குடியில் பிறந்தவள் ஏழை மகனைக் காதலித்தாள். அணிமணிகள் செறிந்த மாளிகையைவிட்டு வெளியேறிஞள். மனதில் எவ்வித வருத்தமுமின்றி குடிலில் குடிபுகுந்தாள். புகுந்த வீட்டில் செல்வநிலை குறைவானது, ஆனல் அவளுடைய காதல் அந்த வீட்டை நிறைசெய்தது.

காதலுக்காக ஒரு பெண் எவ்வளவு மனவுறுதியுடன் வறுமை நிலையை ஏற்றுக்கொள்ளுகிருள் என்பதைப் புலவர் மிகுந்த இயல்புடனும் திறமையுடனும் எடுத்துக்காட்டுகிருர். பாட்டைப் படிக்கும்பொழுது, சிறு குழந்தைகளுக்கு சோறு ஊட்டும் காட்சி நம் மனக்கண்ணில் நிலைபெறுகிறது. தீம்பால் அமுதை ஒரு கையில் வைத்துக்கொண்டு வளர்ப்பவள் ‘உண்ண வா!’ என்று குழந்தையைக் கெஞ்சுதலும், குழந்தை மறுத்தலும், அதை சிறிய கோலெடுத்து அதட்டுதலும், காலில் சதங்கை கொஞ்ச சிறுமி ஓடுதலும், வேலைக்காரக் கிழவிகள் பின் தொடர்தலும், எல்லோருக்கும் தப்பி ஓடிப்போய் பூப்பந்தலின்கீழ் நின்று ‘நான் உண்ணமாட்டேன் போ!’ என்று சிறு பெண் கட்டியங்கூறுதலும், எத்துணை அழகுடன் புலவரால் படம்பிடித்துக்காட்டப்படுகிறது! சோறுண்ணும்போது சிறு குழந்தைகள் செய்யும் பிடிவாதம்—புலவர் பெருந்தகை எழுதிக்காட்டிய ஓவியம்—இன்றும் தமிழர்தம் இல்லங்களில், தளர்நடை பயிலும் குழந்தைகள் செய்வதைக் காண்கிருேம்.

பெண் செல்வக்குடியில் பிறந்தவள் என்பதைப் புலவர் குறிப்பாக உணர்த்துகிருர். தீம்பாலமுது;—அது வைக்கப்பட்டுள்ளது பொன்கலத்தில்—மகளுக்கு உணவூட்ட பல வேலைக்காரிகள் காத்திருப்பது-ஓடும்பொழுது பெண்ணின் காலில் ஒலிப்பது பொன்னுலான சிலம்பு, அந்தப் பொன்சிலம்பினுள் இருப்பது உயர்ந்த ஒளி முத்துக்கள்! இவ்வாறு சூழ்நிலையின் தன்மையைக் கூறுவதால், அவளுடைய வீட்டின் செல்வநிலை ஓரோர்வழிக் கூறப்பட்

...து. கோடீசுவரன் என்று ஒருவனைக் கூறுவதற்குப் பதில், "ஏழடுக்கு மாளிகையில் பொன்னாலான கட்டிலில் ஏவலர் பலர் பணி கேட்ப அவன் வீற்றிருந்தான்" என்று சொல்வதால் அவன் ஒரு செல்வவான் என்பது திடமாகக் காட்டப்படுகிறது. அதுபோல பொற்கிண்ணத்தையும், முத்துகள் பதிக்கப்பெற்ற பொன்னரிச் சிலம்பினையும் கூறுதலால் புலவர் அவள் செல்வக்குடியில் பிறந்த, சேயிழை என்பதை விளக்கிவிடுகிறார்.

அதேபோல், கணவன்வீட்டில் அவள் வறுமையுற்ற நிலை "பொழுது மறுத்து உண்ணும் சிறுமதுகையள்" என்ற அடியில் விளக்கப்படுகிறது. ஒரு வேளைச் சோற்றை மறுத்து, ஒரு வேளை மட்டும் அவள் உண்கின்றாளாம்! எத்தகைய வறுமைநிலை! முன்பு படம்பிடித்துக் காட்டப்பட்ட செல்வ நிலைக்கும், இந்த வறுமை நிலைக்கும் எத்துணை வேறுபாடு! படிக்கும் பொழுது மனதை நெகிழவைப்பதாயுள்ளது!

அவள் இருந்த செல்வ நிலைக்கு, அவளுற்ற வறுமை நிலைக்கும், புலவர் ஓர் ஒற்றுமையை—நகைச்சுவையும், சோகமும் கலந்திட—காண்கிறார். "செல்வச் சூழ்நிலையில், சிறு பிராயத்தினளாக இருக்கும்பொழுது அவள் உணவு உண்ண மறுத்தாள்; கணவன் வீட்டில், மனைவியாகிய நிலையில் இப்பொழுதும் அவள் உணவு உண்ண மறுக்கிறாள்! இருசமயத்திலும் அவள் உணவை மறுத்தே வந்திருக்கிறாள். இது ஏனோ!" என்று ஒரு ஒற்றுமையில், அவள் வாழ்வில் ஏற்பட்டுள்ள பலத்த வேறுபாட்டை புலவர் கூறுகிறார். செல்வச் செறுக்கில், சிறு வயதில் அவள் உணவை மறுத்தாள்; கணவன் வீட்டில், வறுமைநிலையில் அவள் உணவை மறுத்தாள். முதலில் அளவுக்கு மீறிய செல்வம்—இரண்டாவது கடைசி அளவுக்கும் குறைந்த வறுமை, இரண்டு நிலைகளிலும் உணவை உண்ண முடிவதில்லை.

"ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி"யாக இருந்தவள், "பொழுது மறுத்துண்ணும் சிறுமதுகையளாக" ஆகிவிடுகிறாள். "முதலில் நாங்கள் பலர் கெஞ்சிக் கேட்கவும் அவள் மறுத்தாள். இப்பொழுது அவளுக்கு எடுத்துக்கூறுவார் யாருமில்லை; இருப்பினும் உண்ணாமல் இருக்கிறாளே!" என்று செவிலித்தாய் ஆச்சரியப்படுகிறாள்.

முதலில் அவள் உணவு உண்ணாமல் இருந்தது விளையாட்டு காரணமாக, அதனால்தான் 'சிறுவிளையாட்டி' என்று குறிப்பிடுகிறார். பின்பு அவள் உண்ணாமல் இருப்பது 'அறிவும் ஒழுக்கமும் உணர்ந்த' காரணத்தால், இல்லறத்தை நடத்தும் பொறுப்பு வந்துவிட்ட காரணத்தால்!

மாளிகையை விட்டு மண்குடிலுக்கு வந்த போழ்தும், செல்வநிலையை விட்டு வறுமை நிலையுற்றபொழுதும், அந்தப் பெண் கலங்கவில்லை. தனக்குக் கிடைத்த தீம்பால் அமுதையும், பொன் கலங்களையும், பொன்னையும் முத்தையும், அணி மணிகளையும், ஏவல் கேட்க நிற்போரின் தொகையையும் அவள் இப்பொழுது நினைத்துப் பார்ப்பது இல்லை. காதலனைப் பெற்ற பிறகு—காதற் செல்வத்தைப் பெற்ற பிறகு; அவளுக்கு மற்ற செல்வங்கள் மனதிலிருந்து மறைந்துவிட்டன!

அவளுடைய நிலை "ஒழுகுநீர் நுணங்கு அறல் போல" என்கிறார் புலவர். அதாவது "ஓடுகின்ற நீரில் அகப்பட்ட சிறு மணல் போல" என்பதாகும். ஓடுகின்ற தண்ணீரின் போக்கில் அதிலிருக்கும் சிறு மணலும் செல்வதுபோல அவள் இருந்தாள் என்பதாகும். மேட்டு நிலத்தில் மணல் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். வெள்ளம் , வந்து அந்த மணலை அடித்துக்கொண்டுபோகிறது. ஆற்று வெள்ளம் ஓடுகிற போக்கிலேயே சிறு மணலும் செல்கிறது. வெள்ளம் வேகமாக ஓடினால், மணலும் வேகமாக ஓடுகிறது; வேகம் மெதுப்பட்டால் இதுவும் மெதுப்படுகிறது; அது பள்ளத்தில் விழுந்தால், மணலும் பள்ளத்தில் விழுகிறது அப்பொழுதெல்லாம் "சே! மேட்டில் இருந்த நாம் பள்ளத்தில் விழுவதா, கூடாது!" என்று மணல் நின்றுவிடுவது இல்லை. அதுபோல, மேட்டுக்குடியில் பிறந்த பெண், காதல் வயப்பட்டதும், அது அழைத்துச் செல்லும் போக்கில்—வேகத்தில் ஈடுபட்டு, வறுமைப் பள்ளத்தில் விழவும் தயாராகிறாள். ஆற்று நீர் வழிச் செல்லும் மணல்போல, காதல் வெள்ளத்தில் சிக்கிய மங்கையும் அதன் போக்கிலே செல்லுகிறாள்! "ஒழுகுநீர் நுணங்கு அறல்போல" என்று புலவர் கூறும் உவமை வியக்கத்தக்கது!

காதலுக்காக எத்தகைய துன்பங்கள் வரினும் பெண்கள் ஏற்றுக்கொள்ளும் பண்பும், அந்தப் பண்பாட்டைப் போற்றி அழகு ஓவியமாக ஆக்கிடும் தமிழ்ப் புலவர்களின் கவிநலனும் தமிழகத்தில் இருந்தன. காதலோடு இயைந்த வாழ்வு—அதுவே கிடைக்கும் பெரும் பேறு எனத் தமிழ் உலகம் கருதியது; தமிழ் இலக்கியம் எடுத்துக்காட்டுகிறது.

உலகத்தின் மொழிகள்

உலகத்தில் மொத்தம் எவ்வளவு மொழிகள் இருக்கின்றன?

பிரெஞ்சு நாட்டு இலக்கியக் கழகம் செய்த ஆராய்ச்சியில் மொத்தம் 2796 மொழிகள் இருக்கின்றன. இவைகளில்பல ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவைகளாயும் ஒன்றின் வழி மற்றொன்று வந்ததாகவும், சில மொழிகளுக்குப் பொதுவான வேர்ச்சொற்கள் இருப்பதாகவும் உள்ளன.

பொதுப்படையாக, வரலாற்று, பண்பாடு, மொழியியல் அடிப்படைகளை வைத்துக் கொண்டு, ஆராய்ச்சியாளர் உலக மொழிகளை மொத்தம் 25 பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அந்தப் பெரும் மொழிப் பிரிவுகளும், அவைகளைப் பேசும் மக்களின் தொகையும் கீழே தரப்பட்டுள்ளது.

	மொழி வகை	மக்கள் தொகை			
1.	சீன மொழி	43	கோடி		
2.	ஆங்கிலம்	18	,,		
3.	ருஷிய	8	,,	50	லட்சம்
4.	ஜெர்மன்	8	,,		
5.	இந்துஸ்தானி (இந்தி-உருது பிரிவுகள் அடங்க)	7	,,	9	,,
6,	திராவிடம்	6	.,	50	,,
7.	ஸ்வானிஷ்	6	,,	50	,,
8.	ஜப்பானிய	5	,,	50	,,
9.	வங்கம்	5	,,	40	,,
10.	ஓசியானிக்	5	,,		
11.	பிரெஞ்சு	4	,,	50	,,
12.	இத்தாலி	4	,,		
13.	போர்ச்சுகீசிய	3	,,	70	,,
14.	போலிஷ்	3	,,		
15.	அராபிய	2	,,	50	,,
16.	ஹங்கேரி	2	,,		
17.	ருமேனிய	1	,,	60	,,
18,	ஸ்காண்டிநேவிய	1	,,	20	,,
19.	டச்சு	1	,,		
20.	பர்சியன்	1	,,		
21.	துருக்கி			70	,,
22.	பர்மிய			70	,,
23.	கிரேக்க			55	,,
24.	சையாம்			50	,,
25.	பல்கேரிய			45	,,

ஆங்கிலத்தை 18 கோடி மக்கள் அன்றாடப் பேச்சுவழக்கில் கையாண்டாலும், அந்த

பேசத்தெரிந்தோர் உலகின் பல பகுதிகளிலும் இருக்கின்றனர். அவ்வாறு பேசத்தெரிந்தோர் தொகை முழுவதையும் கணக்கிட்டால், மொத்தம் 27 கோடியாகும்.

இவற்றை யல்வாமல், உலகமொழிகள் கீழ்க்கண்டவகையில், குழுமொழிகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவற்றின் பொதுப் பெயர்களும், உட்பிரிவுகளும் தனியே காட்டப்பட்டுள்ளது.

இந்தோ—ஐரோப்பியக் குழுமொழிகள்

அது கீழ்நாட்டு மொழிகள், மேலைநாட்டு மொழிகள் என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

கீழ்நாட்டுப் பகுதியின் உட் பிரிவுகளாவன :

(1) **இந்தியன் :** சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி, வங்காளி, இந்துஸ்தானி, பஞ்சாபி, குஜராத்தி...

(2) **ஈரானியன் :** அவஸ்திக், பேகலவி, பர்சியன், குர்து, பஸ்து.

(3) **அர்மீனியன்.**

(4) **அல்பேனியன்.**

(5) **பால்டிக் :** பிரஷியன், லெட்டிஷ், லிதுவேனியன்.

(6) **ஸ்லோவோனிக் :** ரஷியன், பல்கேரியன், போலிஷ், ஸ்லோவக்......

இந்தோ-ஐரோப்பியக் குழுவில் மேல்நாட்டுப் பகுதியின் உட்பிரிவுகள்.

(1) **கிரீக் :** தற்காலத்திய கிரேக்கம்.

(2) **லத்தீன் :** இத்தாலியன், போர்ச்சுகீஸ், ஸ்பானிஷ், ருமேனியன், பிரெஞ்சு.

(3) **கெல்டிக் :** கேலிக், வெல்ஷ், பிரிட்டன், ஐரிஷ், கார்னீஷ்.

(4) **டாயி டானிக் :** கோதிக், ஐஸ்லாண்டிக், நார்வீஜியன், ஸ்வீடிஷ், இங்கிலீஷ், டச்சு, ஜெர்மன்.

(5) **ஹிட்டிடே.**

2. செமிடிக்—ஹாமிடிக் குழுமொழிகள்

செமிடிக்

கிழக்கு செமிடிக் : பாபிலோனியன், அசிரியன்.

மேற்கு செமிடிக் : ஹீப்ரு, பொயனிகன், ஸிரியக், அராபிக், அபிசீனியன்.

ஹாமிடிக் : எகிப்திய, கோப்டிக், பெர்பெர்.

3. காகசஸ் குழு

கிர்கிஸ், காகஸஸ்.

4. திராவிடக் குழுமொழிகள்

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு, தோடா, கோண்ட், கொண்ட், ஓரான், ராஜமகால், பராகு,......

5. பாஸ்க் குழுமொழிகள்

(1) **பின் - யுக்ரியன் :** பின்னிஷ், எஸ்தோனியன், லாப், ஹங்.

(2) **அல்டெய்க் :** துருக்கி, தார்த்தார், துங்கு, ஜாப், கொரியன்.

6. மங்கோலியக் குழுமொழிகள்

(1) **முண்டா.**

(2) **மான்கெமர் :** அன்னும், கம்போடியன்.

(3) **ஆஸ்ட்ரோனிஷியன் :** பாலினிஷியன், இந்தோனிஷியா, மிலேனிஷியா, மைக்ரோனிஷியா.

(4) **இந்தோ - சீன :** சீன, ஸயாம், பர்மீஸ், திபேத்.

7. எதியோப்பிய மொழிகள்

(1) சூடானிஸ், (2) பாண்டு. (3) புஷ்மன். (4) ஹாட்டன்டாட். (5) கீஸ்.

8. அமெரிக்க மொழிகள்

(1) யுடோ - அசெடிக். (2) இரோகுவானியன். (3) கரிபியன். (4) அராவுகன்

9. ஆஸ்திரேலிய மொழிகள்

(1) ஆஸ்திரேலியன். (2) பாபுவன்.

மொழியாராய்ச்சியாளரான பேராசிரியர் இ. கீகரே என்பவர், மொத்தம் இறந்தது நிலவுவதுமான மொழிகள் 3076 என்று கணக்கிட்டுள்ளார். பிரெஞ்சு இலக்கியக் கழக வெளியீ டின்படி 2796 என்று குறிப்பிடப்படுகிறது. உலகமெங்கும் குறிப்பிடத்தகுந்த மொழிகள் என பட்டவை சுமார் 65 ஆகும். ஆனால் அவற்றில் 50 லட்சம் மக்களாவது பேசப்படும் மொழி வகைகள் 25 ஆகும். அந்த விவரம் முதலில் கொடுக்கப்பட்டுள்ளது.

உலக முழுமைக்கும் ஒரு பொதுமையான—சுலபமான மொழியை உண்டாக்க வேண் மெனச் சிலர் முயற்சித்ததுண்டு. அவற்றில் முக்கியமானது 'வோலாபுக்', 'எஸ்பிராண்டோ என்ற இரண்டுமாகும். 1879-ல், ஷிலியர் என்ற ஜெர்மானியர் வோலாபுக் என்ற புதி மொழியை உலகமுழுமையும் உபயோகப்படுத்தக் கண்டுபிடித்தார். அதேபோல், 1887- டாக்டர் எல். எல். செமனுவ் என்ற ரஷிய மொழியாராய்ச்சியாளர் எஸ்பிராண்டோ என் உலகப் பொதுமொழியைக் கண்டுபிடித்தார். ஆனால் அவை வெகுவாகப் பரவவில்லை.

1930-ல் சி. கே. ஒக்டன் என்பவர் அடிப்படை ஆங்கிலம் என்ற புதிய முறை வகுத்தார். அது ஆங்கில மொழியில் மிக முக்கியமான, அடிப்படைச் சொற்களை மட்டு கொண்டது. அந்த முறையில் மொத்தம் 800 சொற்கள்தான் உள்ளன. இந்த எண்ணூறு சொற்களை வைத்துக்கொண்டு முழுமையும் பேசவோ, எழுதவோ முடியும் என்பது கண்டுபிடி தவரின் திட்டம். இந்த 'அடிப்படை ஆங்கிலம்' முறைக்கு ஆங்கில அரசாங்கம் ஆதரவு த கிறது.

குடியின் விளைவு

லண்டன் நகரத்தில் ஒரு மதுக்கடை அருகே ஒரு இளைஞன் வந்துகொண்டிருந் தான். அவனை அந்த இடத்தில் பார்த்ததும், எதிரே வந்த அவனுடைய மாமனுக் குச் சந்தேகம் வந்துவிட்டது, இவன் குடிப்பதற்குப் பழகிவிட்டானோவென்று. அவ னுடைய நெருங்கிய உறவினர்களில் அவனுடைய மாமனைப்போல நல்லொழுக்கங் களைப்பற்றி அக்கரையுடன் போதிப்பவர்கள் வேறு யாரும் இருக்கமுடியாது. மதுக் கடையருகே தன் மருமகனைப் பார்த்ததும், கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தைப் பெரியவர் கைவிடவில்லை.

"இதோபார்! உனக்கு ஒரு நல்ல ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்லப்போகிறேன்" என்று பெரியவர் ஆரம்பித்தார். "தன்னுடைய உடல் நலனுக்கும், செல்வ நிலைக்கும் அப்பாற்பட்டு, மிதமிஞ்சியவகையில் குடிப்பது மன்னிக்கமுடியாத குற்றமாகும். அவ னைப்பற்றி நல்ல அபிப்பிராயம் எவருக்கும் ஏற்படாது. எப்பொழுதாவது, விருந்து உபகாரங்களில், மிகக்குறைந்த அளவு திராட்சை ரசம் பருகலாம். ஆனால் நிதான மிழக்குமளவு குடித்துவிடக்கூடாது. அது ஒழுக்கக்கேடு."

மாமன் சொல்வதை இளைஞன் உன்னிப்போடு கேட்டான். அவனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. "மிதமிஞ்சி குடித்துவிட்டோமென்று எப்படித் தெரிந்துகொள் வது?"

நல்ல கேள்விதான், பெரியவர் சிறிதுநேரம் யோசித்தார். "அதோ பார்! அங்கு இரண்டுபேர் உட்கார்ந்திருக்கிறார்கள் அல்லவா? மிதமிஞ்சி குடித்திருந்தால், அவர்கள் நான்குபேர்களாகத் தெரிவார்கள் அவ்வளவுதான்" என்று அவர் சொன்னார்.

"ஐயோ, மாமா! அங்கு இப்பொழுது ஒருவர்தானே உட்கார்ந்திருக்கிறார்!" என்று இளைஞன் ஆச்சரியமடைந்தான்.

தையற் கலை

கே. பி. சுந்தரம், G.C.T.

காலர் ப்ராக்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

யோக்கின் விளக்கம்

B, A, 17, 18, 13, C, B, எண்கள் வரை யோக்துண்டை வெட்டி எடுத்துக்கொள்ளவும். பிறகு (ப்ரீல்) மடிப்பு துண்டுகள் யோக்கில் அமைத்துக்கொள்க.

பின்பக்க பாடியில் 1, 10-க்கும் மத்தியில் டார்ட்டு $\frac{3}{4}$ அங். அகலம். $2\frac{1}{2}$ அங். நீளம் இரண்டு அமைக்கவும்.

முன்பக்கத் திறப்பில் பட்டன் 4 அல்லது அதற்கு மேற்பட்டும் அமைக்கலாம்.





வருந்துகின்றோம்

பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் தோழர் க. அன்பழகன் அவர்கள் மாமனாரும்; தோழர்கள்: டாக்டர் ராஜசுந்தரம், ஜயபால் B. E. தோழியர் வெற்றிவேல் செல்வி ஆகியோரின் தந்தையாருமாகிய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தமது 80 வது வயதில், சென்ற 20—10—54 புதன்கிழமையன்று இயற்கை எய்தினர் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். அன்னார் பிரிவால் வருந்தும் குடும்பத்தினர் யாவருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கையின் விளக்கம்

1-ல் இருந்து 0 வரை 7 அங்.
(கை நீளம் $+1\frac{1}{2}$ அங். தோள்பக்கம் மடிப்பிற்கு)

2-ல் இருந்து 0 வரை 4 அங்.
($\frac{1}{8}$ மார்பளவு $+1\frac{1}{4}$ அங்.)

3-ல் இருந்து 2 வரை $5\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவு 3, 0 வரை சாய்வுக் கோடு இணைக்கவும்)

4-ல் இருந்து 1 வரை $4\frac{1}{2}$ அங்.
(முன்னங்கை லூஸ் $+1\frac{1}{2}$ அங்.)

5-ல் இருந்து 0 வரை $3\frac{1}{4}$ அங்.

6-ல் இருந்து 5 வரை $\frac{3}{4}$,,

1, 4, 3, 6, 0 வரை படத்தில் உள்ளபடி வளைவாக வரைந்து, கை வெட்டி எடுக்கவும்.

விளக்கப் படத்தின் வடிவம்போன்று உள்ளதாவென ஒத்திட்டுப் பார்த்து வெட்டத்தொடங்கவும்.

சந்தாதாரர்களுக்கு

சந்தா அனுப்பும் தோழர்கள் தங்கள் முகவரியைத் தெளிவாக எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

சந்தா முடிவதற்குமுன் முடிவுபற்றி சந்தாதாரர்களுக்கு தெரிவித்து வருகிறோம். குறித்த நாளில் சந்தா புதுப்பிக்கப்படாவிட்டால் இதழ் நிறுத்தப்படும்.

சந்தாதாரர்கள் கடிதம் எழுதும் போதும் பணம் அனுப்பும்போதும் தங்கள் சந்தா எண்ணையும் குறிக்க வேண்டும்.

நிர்வாகி, "மன்றம்"

Regd. No. M 6296 MANR

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண் சங்கு சியக்காய்த்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் - ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் வெண்சங்கு சியக்காய்த்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மன்றம் பதிப்பக வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் M. A.

எழுதியவை

கண்ணீரும் செந்நீரும்

வளர்த்த கழகம்	0—12—0
மறைந்த திராவிடம்	0— 3—0

இரா. செழியன் M. A.

எழுதியவை

ராஜாடி ராஜா	0—12—0
பொது அறிவு	0— 8—0

வியாபாரிகட்கு 25% கழிவு. முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. கிடையாது.

விபரங்கட்கு :

நிர்வாகி, **மன்றம் பதிப்பகம்,**
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

மன்றம்

மலர் - 2

1953 - 54

24 இதழ்கள்கொண்டது அழகிய முறையில் பைண்ட் செய்யப்பட்ட வால்யூம் விலை ரூ. 8-0-0

மலர் 2-ல் முதல் இதழ் தவிர மற்ற 23 இதழ்களும் பைண்ட் செய்யப்படாமல் அனுப்ப ரூ. 6-0-0 அனுப்பவேண்டும்.

தனி இதழ் வேண்டுவோர் (1-5-53 தவிர) இதழ் ஒன்றுக்கு 5 அணா வீதம் தபாற்தலைகள் அனுப்புதல் வேண்டும்.

நிர்வாகி, **மன்றம்,**
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St. Mannadi, MADRAS-1.